பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 31 செவ்வாய்க்கிழமை (15.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 230

# தமிழர்களை மனிதாபிமானம் இன்றி நடத்தியமைக்கு விளக்கம் வேண்டும்

## உயர்நீதிமன்றம் அரசுக்கு காட்டமான கட்டளை

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு, முகத்துவாரம் (மோதர) பகுதித் தமிழர்களை விடிகாலை நித்திரைப் பாயில் இருந்து எழுப்பி, அழைத்துச் சென்று, கட்டாயப்படுத்தி, ஒவ்வொருவராகத் தனித்தனியாக வீடியோப் படம் எடுத்து, மனிதாபிமானமற்ற முறையில் பொலிஸார் நடத்தினார்கள் என்று கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பாக அரசின் சார்பில் சட்டமா அதிபரை இன்று உயர் நீதிமன்றத்தில் ஆஜராகி விளக்கம் தருமாறு உயர் நீதிமன்றம் நேற்று காட்டமான உத்தரவு ஒன்றை விடுத்திருக்கின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பாக, அக்கட்சி நேற்று உயர் நீதிமன்றத்தில் மேலதிகமாகச் சமர்ப்பித்த விண்ணப்பம் ஒன்றைப் பரிசீலித்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

கொழும்பில் வகை தொகையின்றித் தமிழர்கள் கைது செய்யப்படுகின்றமையை ஆட்சேபித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைப் பரிசீலித்த உயர் நீதிமன்றம், தமிழர்களின் கைது, தடுத்து வைப்பு ஆகியன தொடர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனமடுவப் பகுதியில் ஐ.தே.க அமைப்பாளர் இரவில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜூலை 15

புத்தளம், ஆனைமடுவ, சொகன்தல்ப பகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தார்.

அவரது வீட்டிற்கு வந்த ஆயுததாரிகள் மூவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நேற்றைய தினம் குவைத் செல்லவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## சென்னையில் சட்டத்தரணிகள் நேற்று மஹிந்தவின் கொடும்பாவியை எரித்தனர்

### மீனவர்களைச் சுட்டுக்கொன்றதை ஆட்சேபித்து

சென்னை, ஜூலை 15

தமிழக மீனவர்கள் இருவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சென்னை உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று மதியம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஆவின் பாலகம் அருகே ஒன்று திரண்ட சட்டத்தரணிகள் இலங்கை அரசுக்கு எதிராகக் கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் சிலர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்தியப் பொருளாதார உடன்படிக்கை நாட்டை அடகு வைக்கும் செயல் என விமல் விசனம்

கொழும்பு, ஜூலை 15

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்படவுள்ள பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தையும் தொழில் வாய்ப்புகளையும் முற்று முழுதாக இந்தியாவுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கவே இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று விமல் வீரவன்ஸ் எச்சரித்துள்ளார்.

நாட்டுக்குப் பாதகமான இந்த ஒப்பந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலையை மீண்டும் அதிகரிக்கக் கோரிக்கை

பால்மா உற்பத்தி நிறுவனங்கள் தமது பால்மா வகைகளின் விலைகளை மீண்டும் அதிகரிப்பதற்கான அனுமதியை நுகர்வோர் அதிகார சபையிடம் கோரியிருக்கின்றன. ஐந்து பால்மா நிறுவனங்கள் தம்மிடம் இந்த அனுமதியைக் கோரியிருக்கின்றன என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்திருக்கிறது. (சி)

# பயங்கரவாதத்தை இராணுவ பலத்தால் முழுமையாக ஒழித்துக் கட்ட வேண்டும்

## அப்போதுதான் அரசியல் தீர்வு சாத்தியம் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 15

இலங்கையின் சமகால நெருக்கடிகளுக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமாயின் பயங்கரவாதத்தை இராணுவ பலத்தால் முழுமையாக ஒழித்துக் கட்ட வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படிக் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தின் சுமைகளை அடுத்த சந்ததியின் தோள்களில் ஏற்றாமல் இருப்பது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பு.



கிழக்கு மக்கள் அனுபவிக்க முடிந்துள்ள ஜனநாயக உரிமைகள் விரைவில் வடபகுதி மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

'சுயதுறு' முயற்சியாளர் சங்கத்தின் முதலாவது வருடாந்தக் கூட்டம் நேற்று அலரிமாளிகையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவிய போதிலும், எந்த அரச நிறுவனமோ அன்றி அரச உடைமையோ தனியார் மயமாக்கப்படவில்லை. பல சந்தர்ப்பங்களில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாணசபை அதிபர், ஆசிரியர்களை தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யக்கூடாது

## நேற்றைய "வீடியோ" மாநாட்டில் கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை15

வடக்கு மாகாண சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர் களை தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யக்கூடாது. ஏற்கனவே இடமாற்றம் பெற்ற அதிபர், ஆசிரியர்களையும் மாகாணசபைப் பாடசாலைகளுக்கு படிப்படியாக இடமாற்றம் செய்ய வேண்டும்.

இவ்வாறு கடும் அறிவுறுத்தலை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு விடுத்துள்ளார்.

யாழ்.பிராந்திய ஆணையாளரின் மாநாட்டு அறையில் இருந்து மாகாணக்கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் நேற்று நடத்திய 'வீடியோ' கலந்துரையாடலின் போது இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

யாழ்.மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர், ஐந்து வலயக்கல்விப்பணிப்பாளர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு அதிக நிதி உதவி வழங்கும் நாடாக ஈரான்!

## ஜப்பானையும் முந்துகின்றது

கொழும்பு, ஜூலை15

இலங்கைக்கு அதிகளவு நிதியுதவி வழங்கும் நாடாக ஈரான் மாறியுள்ளமை இலங்கையின் நிதியமைச்சு வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு அதிகளவு நிதியுதவி வழங்கி வந்த ஜப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவை பட்டியலில் பின்தள்ளப்பட்டுள்ள அதேவேளை, 2008ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கைக்கு அதிகளவு நிதியுதவி வழங்கிய நாடாக ஈரான் மாறியுள்ளது.

இலங்கையின் அரசியல், மனித உரிமை நிலைவரங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சயனைட் அருந்திய நிலையில் ஒருவர் வெள்ளவத்தையில் பொலிஸாரால் கைது!

## கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 15

வெள்ளவத்தை, மூர் வீதியில் நேற்றுமாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலி உறுப்பினர் எனக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவர் சயனைட் அருந்திய நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்று படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தப் பகுதியில் சந்தேக நபர் ஒருவர் நடமாடியதை அவதானித்த பொலிஸார் அவரை அணுகிய வேளை அவர் சயனைட் உட்கொண்டார் என்றும், பின்னர் அந்த நபர் உயிருக்கு ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்

(12 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org










பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நாடாவை வெட்டி செயலகத்தை திறந்து வைப்பதையும், வடமராட்சி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.லியனகே மங்கள விளக்கேற்றுவதையும் முதலிரு படங்களில் காணலாம். அருகில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் காணப்படுகிறார்.விழாவில் கலந்துகொண்ட சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்தில் காணலாம். கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன், மீன் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கம் ஆகியோர் உட்பட பலர் அமர்ந்திருக்கின்றனர்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதேச செயலக பெயர் பலகையை திறந்து வைப்பதை நாலாவது படத்திலும் பருத்தித்துறை நீதிபதி க.அரியநாயகம் ஆசியுரை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

# வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் கோலாகலமாகத் திறக்கப்பட்டது

கரவெட்டி, ஜூலை 15

வரமடராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட நவீன வசதிகளுடனான கட்டடத்தின் திறப்பு விழா நேற்றுக் கோலாகலமாக நடைபெற்றது.

திறப்பு விழாவுக்கு முன்பாக விருந்தினர்கள் பருத்தித்துறை சிவன் கோவிலில் இருந்து மங்கள வாத்தியங்கள், பாண்ட் வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

சிறுவர்கள் காவடி ஆடிவர, பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகியவற்றுடன் விருந்தினர்கள் புதியகட்டடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு செயலகப் பெயர்ப் பலகையை மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி திரைநீக்கம் செய்து வைத்தார். கட்டடத்தின் பெயர்ப் பலகையை யாழ்.மாவட்ட மீன் எழுச்சித்திட்ட பிரதிப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கம் திரைநீக்கம் செய்தார்.

அதன் பின்னர், அரச அதிபர் கே.கணேஷ் புதிய கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். பொதுமண்டபத்தை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் திறந்து வைத்தார்.

மங்கள விளக்கை பிரதம விருந்தினர் மற்றும் கௌரவ விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், மதகுருமார்கள் ஏற்றினர்.

அதன்பின் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

விழாவையொட்டி வெளியிடப்பட்டுள்ள சிறப்பு மலரை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கலாமணி வெளியிட்டு வைத்து உரையாற்றினார். (அ-1-70)

## முகாமைத்துவ உதவியாளர் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை15

அரச பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு ஆள் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டிப்பரீட்சையில் தோற்றி தகுதி பெற்று நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள 11 பேரின் விவரம் வருமாறு:-

ஏ.நிஸ்ரோ - ஊர்காவற்றுறை, ஆர்.விஜிதா - இணுவில் கிழக்கு, எஸ்.புவியரசி - மல்லாகம், எஸ்.சிறிபிரசன்னா - திருநெல்வேலி, எஸ்.சர்மிளா - இணுவில் மேற்கு, யு.பிருந்தினி - குப்பிளான், வி.ஜலரம்பை - தொண்டமானாறு, பி.றோகினி - புலோலி தெற்கு, ஆர்.யாழினி - புலோலி தெற்கு, ரி.ஜெயமுகன் - குருமண்காடு (வவுனியா), ரி.காயத்திரி - குப்பிளான்.

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

'அட்வெண்டிஸ்' சர்வதேச பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பாடசாலையில் போதகர் ஏ.ஜே. இராஜநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு கலந்துகொள்வார். (1)

## வலி.தென் மேற்கில் இன்று கண்காட்சியும் விளையாட்டுப் போட்டியும்

யாழ்ப்பாணம், ஜூலை 15

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி வலி. தென் மேற்கு பிரதேச சபை ஏற்பாடு செய்துள்ள முன் பள்ளிகளின் கண்காட்சி மற்றும் மானிப்பாய் பட்டின உப.அலுவலகத்துக்குட்பட்ட முன் பள்ளிகளின் விளையாட்டுப்போட்டி ஆகியன இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

கண்காட்சி முற்பகல் 10 மணிக்கு பிரதேசசபை மண்டபத்திலும் விளையாட்டுப் போட்டி காலை 9.30 மணிக்கு பிரதேச சபை முன்பள்ளி மைதானத்திலும் இடம்பெறும். (1)

## அல்லைப்பிட்டி உத்திரிய மாதா திருவிழா இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம், ஜூலை15

அல்லைப்பிட்டி உத்திரிய மாதா ஆலயத் திருவிழா இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நற்கருணைத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து நற்கருணை [illegible] [illegible] திருவிழாத் திருப்பலி செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெறும். (1)


# கம்பனிகள் சட்டம்

'புதிய கம்பனிச் சட்டமும் உயர்தரக் கணக்கீடும்'

D.SAM

(சி-553755)

இன்று முதல் இலங்கை முழுவதுமுள்ள அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாம்.



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு
**மாவட்ட மட்டத்தில் சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள் - 2008**

உள்ளூராட்சி வார பெருவிழாவை முன்னிட்டு
மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்
மாவட்ட மட்டத்தில் எமது சபையினால் நடத்தப்படவுள்ளன.
வயது வேறுபாடின்றி யாழ். மாவட்டத்தில் வசிக்கும்
இளைஞர்கள்
(ஆண்கள் மட்டும்) இதில் பங்குபெறலாம்.
மரதன் ஓட்டம் - 10 மைல்
சைக்கிள் ஓட்டம் - 30 மைல்
விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 23.07. 2008 இற்கு
முன்னர் வேலணை பிரதேச சபை
"பொதுசனத் தொடர்பு அதிகாரியிடம் (PRO)"
பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

படிவம்: ரூபாய் 100/= மட்டும்
போட்டி நேரம், காலம், விதிமுறைகள்
பின்னர் அறிவிக்கப்படும்.

கை. மகேந்திரலிங்கம்,
*செயலாளர்,*
*பிரதேசசபை,*
*வேலணை.*

(சி-55[illegible]750)


## துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னையின் 31ஆம் நாள் நினைவஞ்சலி



எங்கள் கழகத்தின்
வளர்ச்சிக்கு
பல் வழிகளிலும்
ஆதரவும்
உதவியும் அளித்த
அன்னையின்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கிறோம்.

மல்லாகம், தெல்லிப்பழை அரிமாக்கழகமும்,
மாவட்ட இணைப்பாளர் சா.ஆறுமுகநாதனும்.

(76354)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
14 - 06 - 1935



மறைவு
15 - 06 - 2008

யாழ்.வீதி, பலாலியைச் சொந்த முகவரியாகவும்,
மீசாலை, வேம்பிராயை தற்காலிக முகவரியாகவும் கொண்ட

### அமரர் இலங்கையர் திருநாமம்

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் அவனியில் பெருமகனாய்
எமது உள்ளத்தில் நிலைபெற்ற இதயத் தெய்வமே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாப் பயணம் சென்றீரோ.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள், மச்சாள்மார்,
மைத்துனர்கள்.

தகவல்:
இராசநாயகம் இராசாத்தி,
துரைசிங்கம் மகாராஜா,
மொறட்டுவை,
கொழும்பு.

(சி/563751)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாதசுந்தரம் சிவபாக்கியலக்சுமி

காரைநகர், வியாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு சிவபாதசுந்தரத்தின் அன்பு மனைவி சிவபாக்கியலக்சுமி 13.07.2008 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
முருகேசு
கனகசுந்தரம்.
இல.90,ஸ்ரீ பத்திரகாளி கோயிலடி,
கேசாவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(76355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்குப் பேரஞ்சலி-31ஆம் நாள் நினைவுமலர் (15.07.2008) உதயன்

## மக்களின் ஒழுக்கத்திற்கேற்பவே அந்த நாடு சிறப்பு அடையும்

எல்லாப் பிறப்புள்ளும் மானிடப் பிறப்பு ஒன்றே மாண்பு வாய்ந்தது. உயிர்கள் எனப்படுபவை ஒன்றுமுதல் ஆறுவரை அறிவுடையவை. ஆனால் ஆறறிவும் நிறையப் பெற்றவர்கள் மானிடரே. ஏனைய உயிரினங்களுக்கு ஆறாம் அறிவு இல்லை. இந்த ஆறாவது அறிவானது சிந்தித்துத் துணியும்பகுத்தறிவாகும். இதனை வள்ளுவர் "சென்ற விடத்துச் செலவிடாது தீதொரீ. நன்றின் பால் உய்ப்பதறிவு" என்று கூறினார். நன்மை இது, நீதி இது, அநீதி இது என்று பகுத்துணரக்கூடிய சிந்தனை மனிதன் ஒருவனுக்கே உண்டு. அத்தகைய சிறப்பாற்றல் பெற்ற மனிதன் ஒழுக்கத்தை ஈறாக மதிக்கக் கடமைப்பட்டவன். மக்களுக்கு பண்பு ஒழுக்கமாகவே அமைகின்றது. சில சமயங்களில் விலங்குகளுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் சில சிறந்த பண்புகள் அமைந்திருப்தைக் காணுகிறோம். ஆனால் மனிதன் அறம் பிறழாத ஒழுக்கத்தினாலேயே சிறப்படைகிறான். மக்கட் பிறவியை எடுத்த நாம் பிறப்பினால் மாத்திரம் பெருமைஅடைய முடியாது. வாழுகின்ற சிறப்பினால்தான் மக்கட் பிறப்புக்குப் பெருமை ஏற்படுகிறது. தமிழ் இலக்கியத்திலே ஒழுக்கம் என்பதை 'திணை' என்ற சொல் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் என்ற பழைய நூலிலும் 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' என்று குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியங்களிலும் திணை என்ற சொல் ஒழுக்கத்தையே குறிப்பிடுகிறது. எனவே ஒழுக்கம் மக்கள் வாழ்வில் சிறந்தோங்கவேண்டும் என்ற கருத்து மிகப் பழம் பெரும் கருத்தாகும்.

பண்டைத் தமிழ் மக்கள் ஒழுக்கத்தையே உயிராகப் பேணினார்கள். ஆனால், வள்ளுவர் அதற்கு மேலும் அரண் செய்து சிறப்பிக்கிறார்.

*'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப்படும்'*

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஒழுக்கக்கேட்டினால் அடையும் பழிக்கு நன் மக்கள் நாணினார்கள். அப்படி ஒரு தீப்பழி நேருமாயின் ஒழுக்கத்தைப் போற்றும் முகமாக உயிரை விடவும் தயாராக இருந்தார்கள். உயிர் கொடுத்துப் புகழ் கொண்ட வாழ்க்கை நம் முன்னோருடைய வாழ்க்கையாகும். இதனாலேயே ஒழுக்கமுடைமை என்ற ஒரு அதிகாரத்தையே அமைத்துத் தந்துள்ளார் வள்ளுவர். நமது முன்னோர் வாழ்வில் இலட்சியம் காணப்பட்டது.



சர்வமதப் பிரார்த்தனையின்போது...

அந்த இலட்சியத்திற்கு அடிப்படை ஒழுக்கமே என்பது விளங்கக் கிடக்கிறது. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் புறநானூறு அழகாகக் காட்டுகின்றது. "பிறர் அஞ்சுவது அஞ்சி புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறின் கொள்ளலர்" என்பது புறநானூற்றுப் பாடல் ஆகும். இன்னும் ஒழுக்க முடையவனை உயர் பிறப்பினனென்றும் அது அற்றவனை இழி பிறப்பினென்றும் சான்றோர்கள் வகுத்துக் காட்டினர்.



*"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை*
*இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி"*

என்ற குறட்பாவும் இப்பாகுபாட்டைக்காட்டுகிறது. மக்களின் உயர்வு தாழ்வு ஒழுக்கத்திலேதான் தங்கி இருக்கிறது. ஏனென்றால் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பர் வள்ளுவர். தமிழ் இலக்கியங்களிலே சிரிய ஒழுக்கத்தைப் பாத்திரங்களின் மூலம் பெரும் புலவர்கள் எடுத்துக் காட்டினர். தசரதன் தனது வாய்மையைக் காப்பதற்காக உயிர் விட்டதை இராமயணத்திற் காண்கிறோம். தருமன் பொறுமை, தருமம் என்னும் ஒழுக்கத்தை மேற்கொண்டமையால் உலகம் போற்றும் உத்தமனாக மகாபாரதத்திற் காட்சி அளிக்கிறான்.

*"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்"*

என்பதற்கிணங்க நல்லொழுக்கத்தை மறந்து வாழ்ந்தோர் முடிவில் துன்பப்பட்டு ஒழிந்ததைச் சரித்திரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. துரியோதனன், இராவணன் முதலியோர் பேராற்றல் படைத் தவர்களாய் இருந்தும் ஒரு சிறிய ஒழுக்கக் கேட்டினால் முடியிழந்து, மானமிழந்து, தீராப்பழி எய்திய வரலாறுகளே இலக்கியங்களில் காட்டப்பட்டுள்ளன. பெண் வழிச் சென்ற அதிகமான் மகனுக்கு அறிவுரை கூறும் பொழுது "எவ்வழி நல்வர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற புறப் பாட்டினால் மக்களின் ஒழுக்கத்திற்கேற்பவே நாடு சிறப்படையும் என்பதை ஔவையார் காட்டுகிறார். நாம் பழைமை பேசுவதில் மாத்திரம் பெருமைப்படுகிறோம். அந்தப் பழைமையை அவர்கள் வாழ்ந்து காட்டிய சிரிய ஒழுக்கத்தை எம் வாழ்வில் இணைத்துக் கொள்ளத் தயங்குகிறோம். இன்று நம் மத்தியிலே ஒழுக்கம் எது? ஒழுக்கக்கேடு எது? என்று பகுத்துணர முடியாத ஒரு அவலநிலை உருவாகி வருகிறது. இந்நிலையில் வள்ளுவருடைய குறளுக்கு சிறந்த முக்கியத்துவம் கொடுத்துப் போற்றுவது தமிழ்ச் சங்கங்களின் பெருங்கடனாகும்.

*('தமிழ்க் கழகம்' தொழிற் திணைக்களகம், கொழும்பு–5 ,தமிழாரம் 10 ஆவது ஆண்டுச் சிறப்பிதழ்)*

## இறைவனுக்கு நல்க விரும்புவதை ஏழைகளுக்குக் கொடுங்கள்....

### திருமந்திரம் எமக்குக் காட்டும் வழி இது

"ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்று நான்காம் நூற்றாண்டிலேயே சீர்திருத்தமான -புரட்சிகரமான கருத்தைக் கூறிய நூல் திருமந்திரமாகும். அது தோத்திர நூல் - சாத்திர நூல் எனப்படுவதை விட வாழ்க்கை நூல் எனக் கூறலே பொருத்தமும் உண்மையும் ஆகும்.

திருக்குறளிற்கும், திருமந்திரத்திற்கும் ஒரே ஒரு வேறுபாடுண்டு. திருக்குறள் அறம், பொருள் இன்பம் மூன்றினையும் முன் வைத்து வீட்டை மறை பொருளாக கூறுகின்றது. திருமந்திரமே வீடு பெறுதலை முதன்மையாக வைத்து அறம், பொருள், இன்பத்தை மறை பொருளாகக் கூறுகின்றது. எனவேதான் திருக்குறளை வாழக்கை நூல் எனக் கூறும் நாம், திருமந்திரத்தையும் வாழ்க்கை நூல் என்றே கூறவேண்டியவர்களாகிறோம்.

அறிவுள்ள மனிதர் வாயில் லகப்பட்ட மந்திரங்கள் பல அரிய சக்திகளையும் உத்திகளையும் கொடுக்கும். ஆனால் அறிவில்லாதவர்ளிடம் அகப்பட்ட மந்திரங்களோ ஆபாசக் களஞ்சியங்களாக மாறிவிடும். பெரும்பாலான சித்தர்கள் இன்றுஞ்சரி, அன்றுஞ்சரி தங்கள் மந்திரங்களைச் தீமைகளுக்கோ, தன்னலத்திற்கோ பயன்படுத்தியிருப்பதை நாம் காணமுடியும். ஆனால் திருமூலர் என்னும் சித்தர் பொய்யுணர்வு பெற்ற சித்தர்களினின்றும் வேறுபட்டு மெய்யுனர்வைப் பெற்ற சித்தராக விளங்கியிருக்கிறார். அதனாற்றான் அவர் ஆக்கியருளிய அருமந்திரமாம் திருமந்திரம் அன்று மட்டுமன்றி என்றும் பொருந்தும் கருத்துக்களைக் கூறுவதாக அமைந்துள்ளது.

ஐம்புலனை அடக்குங்கள், அடக்குங்கள் என்றுதான் அறநூல்கள் பல வலியுறுத்துகின்றன. ஆனால், திருமூலர் ஐம்புலனை அடக்க வேண்டாம் எனத் திருமந்திரத்தில் கூறுகிறார். அவர் அதற்குச் சொல்லும் விளக்கம் மிகவும் அற்புதமானது. ஐம்புலனை அடக்குவதற்காகவா ஆண்டவன் எம்மைப் படைத்தான்? ஒரு மனித உடம்பின் இயல்பாக உள்ள உணர்ச்சிகளை அடக்குவது முறையா? இஃது இறைவனுக்குத் தெரியாதா? இறைவன் நமக்கு ஐம்புலனை அடக்குவதற்காக ஐம்பொறிகளைத் தரவில்லை. அவற்றை நேரிய வழியில் பயன்படுத்தி அவை வாயிலாக நல்லறிவைப் பெறவே படைத்துள்ளான். ஐம்பொறிகளையும் அது பாவிப்பது எப்படி? என்பதிற்றான் திருமூலர், ஆணித்தரமான விளக்கத்தை கண்டிப்புடன் கூறுகிறார்.

நல்ல அனுபவங்களில் ஐம்புலனைத் திருப்பிவிடல்வேண்டும் என்பதுதான் திருமூலர் மந்திரவாக்கு. நல்ல அனுப வங்கள் பல உள. அவற்றுள் தலைமையானது என்றுமே இறவாத இன்ப அனுபவமாகும். ஐம்புலனையும் இறை வனை அனுபவிக்கும் வழியில் திசை திருப்பி விட்டால் மானிடப்பிறவி மிகவும் பேறு பெற்ற பிறவியாக அமைந்துவிடும். நிலையற்ற நமது உடம்பை மிகவும் ஓம்புதல் வேண்டும் என்கிறது வாழ்க்கை நூலாகிய திருமந்திரம்.

#### "உடம்பினை நான் இழுக்கென்று இருந்தேன்"

உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டதால் உடம்பினை நான் இன்று ஓம்புகிறேன் என்று கூறும் திருமூலர் உடம்பில் இறைவன் குடிகொண்டுள்ளான். ஆகவே உடம்பைப் பேணிக் காத்துக்கொள்ளுங்கள் என்று நமக்கு நல்வழி காட்டுகின்றார்.

இருட்டறை மூலையில் இருந்த கிழவி, குருட்டுக் கிழவனைக் கூடக் கருதி, குருட்டினை விளக்கி, குணம்பல காட்டி மருட்டியவனை மணம் புரிந்தனளே-இது திருமந்திரத்தில் ஒரு மந்திர வாசகமாகும். மேலோட்டமாகப் பார்த்தால் இந்த மந்திரத்தின் பொருள் ஏதோ வேடிக்கைக் கதை மாதிரித் தோன்றுகிறது. ஆனால், ஆழ்ந்து அதன் உட் பொருளை நோக்கும்போது அழியாத ஒரு பேருண்மையை நாம் உணர்கின்றோம். கிழவியாகிய சக்தியோகம், இருட்டு உலகில் வாழ்கின்ற ஆன்மாவைத் தூய்மைப்படுத்தக் கருதி குருட்டுத்தன்மையாகிய ஆணவத்தையும் வலிகெடச் செய்து மெய்யுணர்வு நல்கி வீடு பேறளிக்கின்றது. இப்பொருளைத்தான் திரு மந்திரம் அருமந்திரமாக நமக்கு உணர்த்துகிறது.

சக்தியென்னும் யோக நிலையைப் பின்பற்றினால் இத்தகைய நன்மை விளையும். அவ்வாறின்றி உலக ஆபாசங்களில் அதிகமாக உழன்றுகொண்டிருந்தால் அடையும் கதி என்ன? அதையும் உடைத்து விரித்து தெளித்து விளக்குகின்றது திருமந்திரம். ஒருவன் தன் மனைவி செய்து வைத்திருந்த அடிசிலை உண்டான். பின் அந்த மடக்கொடியாளொடு இன்பமும் கொண்டான். இத்தனையும் முடிந்தபின் இடப்பக்கம் சிறிது நோகுது என்றான். சிறிது நேரம்படுக்கையில் படுத்தான். முடிவு.... படுத்தவன் ஒழிந்தே விட்டான். இதனைத் திருமூலர்:

*"அடம்பண்ணி வைத்தார் அடிசிலை அயின்றார்*
*மடக்கொடியாளொடும் மந்தணம் கொண்டார்*
*இடப்பக்கம் சிறிது நொந்தது என்றார்*
*கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"*

என்று கூறுகின்றார்.

"தானுண்டு; சோறுண்டு; தன் வீடுண்டு!" என்று வாழ்ந்தே பழகினவர்களின் கதியைப் பார்த்தீர்களா? இறைவன் நம்மை ஆட்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? அவம்மே ஒழிந்தார் என்னும் ஈனச்சொல் வாரா வண்ணம் காத்துக் கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன?

தாயொருத்தி ஒரு பொருளைக் தான் பெறும்போது, அடையும் மகிழ்ச்சியை விடத் தன் பிள்ளைபெறும் பொழுது அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. அதைப் போல் நாம் இறைவனுக்குக் கொடுக்க நினைப்பதையெல்லாம், இறைவன் உறையும் இதயங்களைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு வழங்கினால், அஃது இறைவனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சியைக் கொடுக்கும். இவ்வாறு திருமந்திரம் எடுத்துக் கூறுகின்றது.

*(கோலாலம்பூர் சிலாங்கூர் இலங்கைச் சைவர் சங்கத்தில் 1977 மார்ச் 26 இல் ஆற்றிய சொற்பொழிவு)*


### சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவுப் பிரார்த்தனையில் பங்கேற்கின்றோம்

சிவமாகித் தமிழாகி தமிழுக்கு ஒளியாகி தமிழர் தம் வாழ்வுக்கு நெறியாகி நின்றாய்
நீயின்று இல்லையென்னும் துயர் தாங்கி நாங்கள் சுமைதாங்க இலைத்தெய்வம் எனவோங்கி நின்றோம்
அன்னை உன் பாதை ஆதாரம் எமக்கென்ன துணைகொண்டு வாழ்வோம்....

தலைவர், இயக்குநர் சபை, பணியாளர்கள் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

தரமான பொருள்களை ஒரேகூரையின் கீழ்பெற்றுக்கொள்வதற்கு சகல வசதிகளுடன் யாழ்.நகர மக்களின் உன்னத பணியில்

சுத்தமான பொதிசெய்யப்பட்ட மளிகைப் பொருள்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள், கேக் வகைகள், ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள், பழரசங்கள் , பிஸ்கட் வகைகள், அழகுசாதன வாசனைப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பாடசாலைப் பொருள்கள், எழுது கருவிகள் போன்ற பல வகையான பொருள்களை நியாயமான விலையில் சுயமாகத் தெரிவுசெய்யலாம்.

கூட்டுறவு நகர் 1
127, காங்கேசன்துறை சாலை , யாழ்ப்பாணம்.

கூட்டுறவு நகர் 2
பிரதான வீதி, (வஸ்ரியன் சந்திக்சுருகாமை) யாழ்ப்பாணம்.

**Coop City**
Jaffna Multi purpose Co-operative Society Ltd
K.K.S. Road Jaffna & Main Street Jaffna.

இணைந்த சேவைகளாக

கூட்டுறவு உணவகம்
127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

யாழமுதம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
நிகழ்வுகளின்போது பரிமாறக் கூடிய பல்சுவை சிற்றுண்டி வகைகளையும் இனிப்பு வகைகளையும் ஒரே கட்டிடத் தொகுதியில் அமைந்துள்ள கூட்டுறவு உணவகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**Co - op Offset Printing Press**
கூட்டுறவுக் கணனி நேரச்சுப் பதிப்பகம்,
கணனி மூலமான அனைத்துவகைப் பதிப்பு வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
❖Computer Type Setting
❖Computer Designing
❖Scaning & A3, A4 Size Laser Printing
❖Plate Exposing ❖Offset Printing
❖Screen Printing ❖Numbering
❖Binding

**Co - op Pharmacy கூட்டுறவு மருந்தகம்**
இலங்கையில் முன்நிலை வகிக்கும் SPC நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்.
அனைத்து வகை ஆங்கில மருத்துவகைளையும் ஆலோசனைகளுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவு மண்டபம்: கலந்துரையாடல்கள், பயிற்சிப் பட்டறைகள், விருந்துபசாரங்கள் ஆகிய நிகழ்வுகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட மண்டபம் .நியாயமான கட்டணத்தில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு ஆசன வசதிகள், ஒலி, ஒளி வசதிகள் பாதுகாப்புடன் கூடிய வாகனத் தரிப்பிட வசதிகள் யாவும் செய்து தரப்படும்.

கூட்டுறவு கிராமிய வங்கி Rural Bank
-சேமிப்புத்திட்டம், ஓய்வூதியம், சுயமுயற்சிக் கடன் வழங்கல் ஆகிய மக்கள் சேவையை அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றது.

கண்ணன் புத்தகநிலையம் மல்லாகம் சந்தி, மல்லாகம்.

திருமகள் அழுத்தகம்
துர்க்கை அம்மன் கோயிலடி, தெல்லிப்பழை.

ஜனா பாம்
மல்லாகம் சந்தி, மல்லாகம்

ராம் நெற் கொம்
தொலைத் தொடர்பகமும் கணனி திருத்தகமும்
கே.கே.எஸ்.றோட்.மல்லாகம் சந்தி.

சயன் உணவகம்
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

ஜீவா ஸ்ரோர்ஸ்
பதினப் பத்திரிகை முகவர்
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

கிருபா போட்டோ
பதினப் பத்திகை முகவர்
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

அபிஷேக் மல்ரி ஸ்பொட்
இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக,கே.கே.எஸ்.றோட், மருதனார்மடம்.

ஸ்ரீகரன் புக் சென்ரர்
கே.கே.எஸ்.றோட், சுன்னாகம்.

துர்க்கா
பொத்தகச் சோலை
பஸ்நிலையம், சுன்னாகம்.

சிற்பாலயம்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.


**ஆளுமைகள் பல கொண்ட அம்மாவின் வழிநடக்க முனைந்திடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல், உளப் பாதிப்புக்குள்ளான சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு உழைத்தமைக்காக சிறப்பு விருது பெற்ற ஜி.ஓ.சி நிறுவனம்

'சமாதானத்திற்கான இளவரசி டயானா நிறுவனம்' (**Princess Diana Institute of Peace**) போரின் பின்னரான பொருளாதார, பால் வேறுபாடுகள் பற்றிய விடயங்களை ஆய்வு செய்யும் ஓர் அமைப்பு. அது யுத்தத்தால் பெரிதும் பாதிப்புற்றிருக்கும் யாழ்.குடாநாட்டில் இயங்கும் 'இறைவனின் சொந்தப் பிள்ளைகள்' (**Gods Own Children**) என்ற அரச சார்பற்ற அமைப்பிற்கு சிறப்பு விருதொன்றைத் தகுதி அடிப்படையில் வழங்கியுள்ளது. அதன் முகாமைத்துவத்தின் அதிசிறந்த தன்மைக்காக அது வழங்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்பு ஐரோப்பிய ஒன்றியம், கனடா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலுள்ள தன்னோடு ஒத்த கருத்துகளையுடைய அமைப்புகள் தனிநபர்களின் ஆதரவையும் வளங்களையும் பெற்று குடாநாட்டில் பாதிப்புக்குள்ளான பிள்ளைகளின் நலன்களை இலக்காகக் கொண்டு இயங்குகின்றது. அது சமாதான நீதிவான் கலாநிதி ஆனந்குமா ரின் தலைமையில் அதன் இயக்குநர்கள் திருமதி ஆன் மேரி ஜசிந்தா, திருமதி சாரதா புண்ணியமூர்த்தி ஆகியோரின் விடா முயற்சியில் நற்பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றது.

மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஓரளவிற்கு வழிவகுத்ததும் தற்போது செயலற்றிருப்பதுமான சமாதான ஒப்பந்தத்தின் தொடக்க காலத்தில் (2003 மார்ச்சில்) 'இறைவனின் சொந்தப் பிள்ளைகள்' உருவெடுத்தது. அப்போது கொழும்பில் இயங்கிக்கொண்டிருந்த **British Business College (Pvt) Ltd** எனப்படும் தனியார் கல்லூரி தனது கிளை ஒன்றை இங்கு தொடங்கியது. அது 5 வயதை முடிக்காத சிறார்களுக்கான முன்பள்ளியாகவும் சிறார்களுக்கான கல்விசார்ந்த பயிற்சிப் பொழுது போக்கிடமாகவும் பெயரளவிலான சிறிய கட்டணத்தை அறவிட்டு தனது செயற்பாடுகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் முன்னெடுத்தது. மேலும் வளர்ந்தோருக்கான ஆங்கிலக் கல்வியும் இங்கு முன்னெடுக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் கல்விச் செயற்பாடுகளின் தரம் இப்பிரதேசத்தில் மிகவும் குன்றியிருந்தது. எனவே இதில் கிடைக்கப்பெற்ற பயிற்றப்பட்ட ஆங்கிலமொழி ஆசிரியர்கள், தற்காலத்திற்கேற்ற பாடத்திட்டமும் கற்பிக்கும் முறைகளும் வெளிநாடுகளின் முதலீடு ஆகிய உள்ளீடுகளால் யாழ்.மக்களின் வரவேற்பும் ஆதரவும் இதற்கு நிறையக் கிடைத்தது.

### பாதிப்புற்றோருக்குக் கல்வி

எனினும் காலகதியில் அதன் நிர்வாகிகள் புதிய வடிவிலான சில முக்கிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தனர். யுத்தத்தினால் ஏற்பட்ட மன அழுத்தத்தினால் வருந்திய, மூளை, உடல் ரீதியாகக் குறைபாடுடைய சிறார்கள் சிலர் அங்கே உள்வாங்கப்பட்டனர். ஆனால் இப்படியானவர்களோடு சேர்ந்த தம் பிள்ளைகளும் படிப்பதை ஏனைய சில பிள்ளைகளின் பெற்றோர் விரும்பவில்லை. மேலும் பாதிக்கப்பட்ட வேறு பல பிள்ளைகளின் பெற்றோரும் வறுமையால் கட்டணம் செலுத்த முடியாமலிருந்தனர்.

இதைவிட, 2004 டிசெம்பர் 26இல் மேலும் ஒரு பெரும் அனர்த்தம் 'சுனாமி' என்ற வடிவில் ஏற்பட்டு மக்களும் மாபெரும் உயிர், உடமை அழிவோடு பெரும் தொகையான பிள்ளைகளை அநாதைகளாகவும் மனோநிலைப் பாதிப்புக்குள்ளானவர்களாகவும் ஆக்கியது. முன்னரே யுத்தத்தினால் இப்படியாகப் பாதிக்கப்பட்டிருந்தவர்களோடு இவர்களும் சேர்ந்து சமூகத்திற்கு மாபெரும் பொறுப்பாகினர்.




இதற்கு முகம்கொடுக்க, இக்கல்லூரியின் இயக்குநர்களும் ஆசிரியர்களிலும் பொதுமக்களிலும் இருந்து முன்வந்த ஆர்வலர்கள் சிலரும் ஒரு செயற்குழாமாகச் சேர்ந்து சிறிதுகாலம் நன்றாக ஆலோசித்த பின் இலாபம் தேடாத அறக்கொடை நிதியம் ஒன்றை நிறுவவும், அதன் பயனாய் யாழ்.குடாநாட்டில் கட்டணம் எதுவும் அறவிடாமல், விசேட தேவைகளுக்கான பாடசாலைகளை நடத்தவும் தீர்மானித்தனர்.

அதற்கிணங்க மோசமாகப் புறக்கணிக்கப்பட்ட இப்பிராந்தியத்தில் பாதிப்புக்குள்ளான பிள்ளைகளுக்குச் சேவை செய்யும் நோக்குடன் 2005 ஓகஸ்ட் 24இல் 'இறைவனின் சொந்தப் பிள்ளைகள் அறக்கொடை நிதியம்' ஆதாயம் தேடா ஒரு நிறுவனமாக நிறுவப்பட்டது. இதனால் நடத்தப்படும் குறிப்பிட்ட தேவைகளுக்கான பாடசாலைகளில் மூளை, மன, உடல் வளர்ச்சி குன்றியோர் உட்பட பலதரப்பட்ட பாதிப்புக்குள்ளானவர்களும், யுத்தத்தாலும் வறுமையாலும் பாடசாலைகளுக்கு ஒருபோதும் செல்லாதவர்களும் மெல்லக் கற்போரும் உள்வாங்கப்பட்டு கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவர்களுக்கு முற்றிலும் இலவசமாகப் பாடசாலை உபகரணங்களும் சீருடைகளும் சத்துணவும் வழங்கப்படுகின்றன.

சிறந்த முறையிலான முகாமைத்துவத்திற்காக வழங்கப்பட்ட இவ்விருதுக்கான மதிப்பீட்டைச் செய்வதற்கு கண்டிப்பான நோக்கங்கள், தெளிவான இலக்கும் குறிக்கோள்களும், ஆர்வலர்கள், ஆசிரியர்கள் மேலான சீரான ஒழுக்கக் கண்காணிப்பு, கவனிப்பு, அர்ப்பணிப்பும் பொறுப்புணர்ச்சியுமுள்ள ஆசிரியர் குழாம். வெளிப்படைத் தன்மையுடையதும் நன்கு வரையறுக்கப்பட்டதுமான நிதி பெறும் முறை ஆகியவை இப்பாடசாலையினால் கவனத்திலெடுக்கப்பட்டவற்றுள் சிலவாகும்.

---

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லத்துரை இராசமணி

(சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, சில்லாலை மேற்கு, சாந்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை இராசமணி அவர்கள் 12.07.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கற்பகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தேகம்மா, இராசையா, தம்பித்துரை, தங்கமலர் மற்றும் தெய்வேந்திரம், குருலிங்கம், அழகேந்திரம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புக் சகோதரியும் காலஞ்சென்ற இராமலிங்கம் செல்லத்துரையின் அன்பு மனைவியும் இராசேஸ்வரி, மனோரஞ்சிதமலர், யோகேஸ்வரன் (ஜேர்மனி), சிவசந்திரபோஸ் (ஓய்வூதியர், நிலஅளவைத் திணைக்களம்), முருகதாஸ் சாமியூர், வேல்முருகன் (இத்தாலி), ஜெயராசா (ஜெயபவான் சைவ உணவகம், பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத் தாயும் சாம்பசிவம், காலஞ்சென்ற ஜெயராசசிங்கம் மற்றும் பத்மாவதி (ஜேர்மனி), தேவரஞ்சிதமலர், இராசேஸ்வரி, நாகேஸ்வரி (இத்தாலி), ராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியும் சாந்தகுமார் (கனடா), சாந்தினி (லண்டன்), சாரதாதேவி (லண்டன்), இராசேஸ்வரன், சிறிபாஸ்கரன் (கனடா), சுதாமதி (ஜேர்மனி), ஜெயமதி, ஜெயமலர் (ஜேர்மனி), பாமினி (கனடா), சதீஸ் (ஜேர்மனி), துசாந்தி (கனடா), நிஷாந்தன் (ஜேர்மனி), ஆயிசா (ஜேர்மனி), குலேந்திரன் (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), சிவரூபினி (ஜேர்மனி), சிவதீபன் (ஜேர்மனி), தேவ யாழினி, மதனராஜ் (கனடா), வாகீசன், ஜனகீசன் (நோர்வே), கஜன்சன், வினோஜன், றொசாந்தன், குபிதாஸ், தர்சிகன் (இத்தாலி), திவ்யா (இத்தாலி), றம்மியா (இத்தாலி), ஜனனி, லோஜிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.07.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பில்துறை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை மேற்கு,
சில்லாலை,
பண்டத்தரிப்பு. (சி/553745)

தகவல்:
செ.ஜெயராசா (ஜெயபவான் சைவ உணவகம்)
பண்டத்தரிப்பு.

---

## ஐ.பி.எம்.எஸ் நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை15

ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் கல்வி ஆண்டு 2007/2008 கற்கை நெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஐ.ஐ.எஸ். 'சிற்றி கம்பஸ்' மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் திருமதி வி.ஜெயசோதி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஐ.ஐ.எஸ். குறூப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் இணைப்பாளருமான கே. விக்னேஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

## வீதிகள் சேதம்

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியிலிருந்து கட்டாப்பாறி வீதியூடாக பொன்னாலை வீதிக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரியிலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் செல்லும் வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தியமைக்கப்படவில்லை.

இதனால் அந்த வீதிகளில் பாரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளதால் பாடசாலை மாணவர்களும், ஏனையோரும், வாகனங்களும் பிரயாணம் செய்யமுடியாது பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இதுவிடயமாக அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் பல முறை எடுத்துக் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்று கவலை தெரிவிக்கின்றனர். (203-100)


## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ரூட் ELF 150 வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 271334 (76286)

## தவறிவிட்டது

பிறவுண் றோட்டிற்கும் அன்பொளி கல்வியகத்திற்கும் இடையில் 1½ பவுண் தங்கநகை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

குபின் பலசரக்கு வாணிபம்


## கட்டாயக் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை15

பெற்றோருக்கான கட்டாயக் கல்வி விழிப்புணர்வுக் கூட்டம் யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு நிகழ்வில் அந்தப் பாடசாலை சமூகத்தை சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். பாடசாலை மட்டத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் தி.சோமசேகரம் தலைமையில் நடைபெற்றது.

கட்டாயக் கல்வி செயற்பாட்டாளர்களான அந்தப்பகுதி கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், யாழ்.பிரதேச செயலகத்தின் சிறுவர் நன்நடத்தை அதிகாரி ஆகியோர் கலந்து கருத்துரை வழங்கினர். இதன் முடிவில் அந்தப் பகுதியில் பாடசாலை செல்ல வேண்டிய வயதில் கல்வி பெறத் தவறிய சிறார்களை பாடசாலையோடு இணைத்துக்கொள்ளும் தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-302)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜேன் செல்வநாயகி அம்மா தம்பிஐயா



கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜேன் செல்வநாயகி அம்மா தம்பிஐயா அவர்கள் 13.07.2008 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவரான தம்பிஐயா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் திரு.திருமதி கனகசபை தம்பதியரின் ஏகபுத்திரியும் திரு.திருமதி வேலுப்பிள்ளையின் பாசமிகு மருமகளும் சண்முகநாதன் (இளைப்பாறிய ஆணையாளர், நகரசபை) அவர்களின் சகோதரியும் சற்குணானந்தராஜா (**Rtd, R.A.O Postal Department**), தவராஜா (**Rtd, S.O Antimalarian Campaign**), இராஜசோதி, இராஜேஸ்வரி, இராசஞானம் (**Teacher, Killner Primary School**), இன்பராஜா (**Accountant, Light Engineering Enterprises**), ஜீவராஜா (**Engineer, Australia**), இராசமனோகரி (**Rita - N.H.D.A**) ஆகியோரின் அன்புத் தாயும் ஞானமலர் (**Rtd. Teacher Stafford Ladies College**), சீதாதேவி, காலஞ்சென்ற மகாலிங்கம் (**Rtd. Supdt. of Surveyor**), காலஞ்சென்ற சேவியர் (**Rtd. Accountant, Business Engineering, Enterprises**), தங்கத்துரை (வலம்புரி பத்திரிகை காரியாலயம்), றீற்றா சறோஜினி (கீதா), ரஞ்சனா (**Australia**), வேல்முருகு (**Asst. Accountant, N.H.D.A**) ஆகியோரின் மாமியும் டினேஸ், தர்சிக்கா, சுஜந்தன், வசந்தன், சுஜந்தினி, வசந்தினி, குமுதினி, நந்தினி, மாதினி, ராஜ்குமார், சிவகுமார், டிலானி, டிலோஜ், நிரூஜன், டிலக்ஷன், நிசாந்தி, நிருத்தியா, சரண்ணியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் றோகித், அனுஜா, அனுஜ், ரஞ்சினி, திவானா, துஸாரி, பிளசினா, பிறிவியனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர். (76296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொ.சண்முகநாதன் [சண் அங்கிள்] எழுதிய "நகைச்சுவை இலக்கிய முன்னோடிகள்" நகைச்சுவைக் கட்டுரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியில் இடம்பெற்றது.இந்த வெளியீட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்களில் ஒரு சிலவற்றை இங்கு காணலாம்.
நூலகர் க.சௌந்தராஜன், எழுத்தாளர் செங்கையாழியான், ஸ்கந்தவரோதயாவின் முன்னாள் அதிபர் சிவாஜி ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். மூதறிஞர் சி.சரவணபவன் [சிற்பி] நூலை வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியை சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் ந.சண்முகவடிவேல் பெற்றுக் கொள்வதையும் நூலாசிரியர் பொ.சண்முகநாதன் நடுவில் நிற்பதையும் நான்காவது படத்தில் காணலாம். [படங்கள்: விங்கன்]

# பிள்ளைகளின் எதிர்காலம் சிறந்த முறையில் அமைய பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் அவசியம்

## யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் சொல்கிறார்



நல்லூர், ஜூலை 15

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களும்அதிக கவனம் எடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் எதிர் காலத்தைச் சிறந்த முறையில் கட்டியெழுப்பமுடியும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.வல யக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் பரிச ளிப்பு விழா கடந்த சனிக்கிழமை கல்லூரி அதிபர் அகிலதாஸ் தலைமையில் நடை பெற்றது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வலயக்கல்விப்பணிப்பாளர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பிள்ளைகளை ஊக்குவிப்பதிலும், பாட சாலையை வளர்ச்சியடையச் செய்வதி லும் தென்பகுதி மக்கள் காட்டும் அக்க றையை ஒரு சமயம் கம்பஹா மாவட்டத் தில் கண்டபோது யாழ்ப்பாண மக்களுக்கு இவ்வாறு கரிசனை இல்லையே என கவ லைப்பட்டேன்.

எமது பெற்றோர்களும் பாடசாலையின் வளர்ச்சியிலும், பிள்ளைகளின் வளர்ச்சியி லும் மிகவும் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

அதேபோன்று ஆசிரியர்களும் கடமை என்ற நிலையை விடுத்து சேவை என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும்.

மாணவர்கள் பல்வேறு புதிய உத்திக ளைக் கையாளக்கூடியதாக அவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரி யர்களுக்குரியது. அத்துடன் பின்னடை வுகளைக் கண்டறிந்து முகாமைத்துவ சமுகத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யக்கூடிய ஆற்றலை ஏற்படுத்த வேண் டிய செயற்பாடுகளில் வேகமாகச் செயற்பட்டு அந்த இலக்கை மாணவர்கள் பெறக்கூடி யதான செயற்பாட்டை மேற் கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் அர்ப்ப ணிப்பான சேவை வெளிவர வேண்டும்.

2010 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா வைக் கொண்டாடவுள்ள நேரத்தில் சர்வ தேச தேவைக்கமைய தேசிய பாடசாலை யாக, முதன்மைப் பாடசாலையாக இணை வதுடன் பிள்ளைகளின் பல்வேறு சாதனை களை வெளிப்படுத்தும் கல்விக்கூடமாக இது மாறவேண்டும்.

அதிபர், ஆசிரியர்களின் பணியும் பெற் றோர்கள், பழைய மாணவர்களது கூட்டான ஒட்டுமொத்த செயற்பாடுகளின் விரிவு கல்லூரியின் வளர்ச்சிக்கான உந்துசக்தி யாக விளங்க வேண்டும்.

உன்னதமான தலைமைத்துவமும் உறு தியான செயற்பாடுகளும் கல்வியின் முக் கிய நோக்கம் என்பதைப் புரிந்து கொண்டு பணியாற்றும் உங்களுக்கு எமது திணைக் களம் தனது முழுவளத்தையும் வளங்கத் தயாராகவுள்ளது- என்றார். (203-111)

# நல்லூர் பாலகதிர்காமம் ஆடிவேல் பவனி எதிர்வரும் சனிக்கிழமை ஆலயவீதியில் மட்டும்

நல்லூர், ஜூலை 15

நல்லூர்ஸ்ரீபாலகதிர்காம ஆலயத்தின்ஆடி வேல் பவனி எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாட்டின் அசாதரண சூழ்நிலை காரண மாக ஆடிவேல் ரதபவனி நகரின் முக்கிய வீதிகள் ஊடாகப் பவனி வரமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

தீர்த்தத் திருவிழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெற வுள்ளது என்று தேவஸ்தானகுரு சிவஸ்ரீ கு.குமாரக் குருக்கள் தெரிவித்தார்.

வழமையாக யாழ்.நகரின் முக்கிய வீதிகள் வழியே ஊர்வலம் வரும் மேற்படி தேவஸ் தானத்தின் ஆடிவேல் பவனி கடந்த மூன்று ஆண்டுகளாக நகரின் முக்கிய வீதிகளூடாக இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (203-111)

# யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் அழகியற் கண்காட்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்.கல்விவலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் அழகியல் கண்காட்சி நாளை புதன்கிழமை தொடக் கம் மூன்று தினங்கள் யாழ்.கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில் இடம்பெற வுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தினர் மேற்கொண்டுள் ளனர்.

எனவே கண்காட்சிக்கான ஆக்கங் களை இன்று செய்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறி வித்துள்ளார்.

அழகியல் பாடரீதியாக தலா மூன்று ஆக்கங்களை ஒவ்வொரு பாடசாலை களையும் அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (203-202)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கில தினவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 15

பலாலி ஆசிரியர் கல்லூரியின் ஆங்கில தின விழா நாளை மறுதினம் வியழாக் கிழமை நடைபெறவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண் டப கேட்போர் கூடத்தில் அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இவ் விழாவில் யாழ். கல்விவலயத்தின் உதவிப் பணிப்பாளர் (ஆங்கிலம்) எஸ்.தியாகராஜா பிர தம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் நான்காவது வருட பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஜூலை15

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத் தின் நான்காவது வருட பூர்த்தியும் புதிய நிர்வாகிகள் பதவியேற்பும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

கழகத்தினால் தென்மராட்சி கிழக்கு பாடசாலைகளின் மாணவர்களுக்கு நடத் தப்பட்ட கண்சிகிச்சை முகாமில் கண்பார் வையில் குறைபாடு காணப்பட்ட மாண வர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணா டிகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட சர்தேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உப ஆளுநர் லயன் லக்ஸ்மன் விஜேசிங்க, மாவட்ட உதவிச் செயலாளர் (வடக்கு) லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் ஆகி யோர் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி களை வழங்கியதுடன் கழகத்தின் பல் வேறு நலத்திட்டங்களையும் ஆரம்பித்து வைத்தனர். (203-207)



கிளாரட் சபையின் நிறுவுனரான தூய அந்தோனிமரிய கிளாரட்டின் பிறப்பின் 200 ஆவது ஆண்டை நிறைவு கூருமுகமாக அகில இலங்கை ரீதியில் பல இசைப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதையொட்டி கடந்த 5 ஆம் திகதி ''கிளாரட் கிறிஸ்தவ இசைவிழா'' போட்டி யாழ்.மாவட்ட மட்டத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பதினொரு குழுக்கள் போட்டியாளர்களாகக் கலந்து சிறப்பித்தன. இப்போட்டியில் முதலாவது இடத்தை இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட மாணவிகள் தட்டிச் சென்றனர். இரண்டாவது இடத்தினை யாழ்.மரியன்னை பேராலயமும் மூன்றாவது இடத்தினை மல்லாகம் தூய சவேரியார் பாடகர் குழுவினரும் திருக்குடும்ப மடக் கல்லூரி மாணவிகளும் பெற்றுக் கொண்டனர். அகில இலங்கை ரீதியில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட மாணவிகள் தகுதிபெற்று[illegible] இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மட மாணவிகளைப் ப[illegible] (203)

# இடம் பெயர்ந்தோர் சங்கக் கிளை அச்சுவேலியில்

யாழ்ப்பாணம்,ஜூலை 15

வலிகாமம் வடக்கு இடம் பெயர்ந்தோர் நிவாரண சங்கத்தின் கிளை அலுவலகம் ஒன்று அச்சுவேலியில் விரைவில் திறக்கப் படவுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களின் நலன் கருதி இந்த அலுவலகம் திறக்கப்படவிருப்பதாக சங்கத்தின் தலைவர் மூ. விநாயகமூர்த்தி தெரிவித்தார். (1)

# மானிப்பாய் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

நவாலி, ஜூலை 15

உலக சுற்றாடல் தினத்தையொட்டி மானிப்பாய் பிரதேச சபையினர் கடந்த 9ஆம் திகதி தொடக்கம் சபையின் செய லாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமை யில் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான செயற் பாட்டுத் திட்டங்கள், சிரமதான வேலை கள் என்பவற்றை மேற்கொண்டு வருகின் றனர்.

இதன் கீழ் நாளை புதன்கிழமை முன் பள்ளிச் சிறார்களதும், பெற்றோர்களதும் விளையாட்டுப் போட்டிகளும் கண்காட் சியும் இடம்பெறவுள்ளன. (203-100)

# 'வணிக வானம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 15

அச்சுவேலி மத்திய கல்லூரி வணிக மன்றத்தினரின் 'வணிகவானம்'நூல் வெளி யீட்டுவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.வலய கல்வி முகா மைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.இரவீந்திரன் முதன்மை விருந்தின ராகக் கலந்து கொள்வார்.

முதன்மை விருந்தினர் நூலை வெளி யிட்டு வைக்க அதன் முதற்பிரதியை பழைய மாணவர் இ.யோகராஜா பெற்றுக் கொள்வார். (203)

# பிரிவுபசார விழாவும் மாணவர் கௌரவிப்பும்

ஊர்காவற்றுறை, ஜூலை 15

எழுவைதீவு முருகவேள் வித்தியால யத்தில் நீண்டகாலமாக கடமையாற்றி இடம்மாற்றலாகி சென்ற முன்னாள் அதிபர் தி.சிவபாலனின் பிரிவுபசார விழா நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கல் லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் து.கிருபாகரன் தல மையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு தீவக கல்வி வலயப்பணிப்பாளர் வ.இராதா கிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், லீட்ஸ் நிறுவன மாவட்ட அதிகாரி ஜே.செல்வராஜா, தீவக கல்விவலய திட் டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.மகேஸ் வரன், ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

அன்றையதினம் பாடசாலை ஓவியர் தே.அகிலன் 2007 ஜி.சீ.ஈ சா/தரப்பரீட் சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொண்ட உ.சஞ்சீபராஜா, 2007 இல் உய ரம் பாய்தலில் மாவட்ட மட்டத்தில் மூன் றாம் இடத்தை பெற்றுக்கொண்ட க.தனு ஷன், வ.சசிக்குமார், 2008 இல் 100 மீற்றர் ஓட்டத்தில் மாவட்ட மட்டத்தில் 3 ஆம் இடத்தை பெற்றுக் கொண்ட ம.கஜீத் 2007 இல் வலயமட்டத்தில் முதன்மை வீராங்கனை யாக தெரிவு செய்யப்பட்ட ந.தர்சிகா ஆகியோ ரும்கௌரவிக்கப்படவுள்ளனர். (203-127-325)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர், இடப்பெயர்வு, கிளைமோர், வான்தாக்குதல்

# வன்னியில் யுத்தம் தீவிரமடைவதால் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைவு!

கிளிநொச்சி,ஜூலை15

வன்னியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த சில வாரங்களாகப் போர் நெருக்கடிகள் தீவிரமடைந்திருப்பதையடுத்து மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு பல முனைகளில் - ஒரே தடவையில் - இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையால் நாளுக்குநாள் மக்கள் இடம்பெயர்ந்துகொண்டிருக்கின்றனர். இடம்பெயரும் மக்களின் நலன்புரி நிலையங்களாக சில பாடசாலைகள் செயற்பட்டு வருவதால் அங்கு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் ஆசிரியர்களும் அதிபர்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. சில பாடசாலைகள் காடுகளிலும் மர நிழல்களிலும் இயங்கி வருகின்றன.

இவற்றைவிட நாளாந்தம் அங்கு விமானத்தாக்குதல்கள் இடம்பெற்று வருவதால் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதைத் தவிர்த்து வருகின்றனர் - என்றும் இதனால், தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற பாடசாலைகளிலும் மாணவர் வரவு மிகவும் மந்தமாக இருப்பதாகவும் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரீ.குருகுலராஜா தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசம் மீதான எரிபொருள் தடை மற்றும் பூநகிரி உட்படப் போர் முனைப் பிரதேசங்களை அண்டிய பகுதி வீதிகளில் இடம்பெறுகின்ற கிளைமோர் தாக்குதல்கள் காரணமாக ஆசிரியர்கள் தூர இடங்களிலிருந்து வருவதற்கு அச்சப்படுகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

''பூநகரிப் பிரதேசத்தில் உள்ள 29 பாடசாலைகளில் 5 பாடசாலைகள் முற்றாகச் செயலிழந்துள்ளன. 12 பாடசாலைகள் வேறு இடங்களில் - கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரம் பகுதியில் - இயங்கி வருகின்றன. எஞ்சிய 12 பாடசாலைகளே அவற்றின் சொந்த இடங்களில் இயங்குகின்றன.'' - என்று கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

எல்லைப்புறப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள், அங்கு தமக்கு உயிராபத்து இருப்பதால் கடமைக்குச் செல்ல முடியாதிருப்பதாக முறைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றனர் - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இதனால் வன்னிப்பகுதியெங்கும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் இனிவரும் நாள்களில் மாணவர்கள் மேலும் பாதிக்கப்படக்கூடிய புறச்சூழல் ஏற்பட்டு வருவதாகவும் அவர் கவலை தெரிவித்தார். (சி)

## மண்சரிவில் சிக்கி இருவர் பலி!

கொழும்பு,ஜூலை15

பேராதனை, பொல்கமுல்லைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மண் சரிவினால் ஒருவர் உயிரிழந்தார்; மேலும் இருவர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, காலி மஹிந்த வித்தியாலயத்தை அண்மித்த பகுதியில் நேற்றுமுன் தினம் பிற்பகல் ஏற்பட்ட மண்சரிவினால் ஒருவர் உயிரிழந்தார்; மேலும் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரின் நிலைமைகள் கவலைக்கிடமாக உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வங்கிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில்...



மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி நெல்லியடிக் கிளையில் ஆண்டு விழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

வாடிக்கையாளரான எஸ்.சத்தியமூர்த்தி மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் வீ.சிவசிதம்பரம், கிளை முகாமையாளர் எஸ்.சிவஞானசுந்தரம்பிள்ளை ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா நிகழ்வில் இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசனின் சேவையைப் பாராட்டி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் விருது வழங்குவதையும் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி உரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (218)



மக்கள் வங்கிக் கிளையின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.[illegible] இடம்பெற்ற நிகழ்வில் வாடிக்கையாளர் ஒருவர் மங்கள விள[illegible] மையாளர் வி.எஸ்.முதலி அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:லக்ஷ்மன்)

## ஊர்காவற்றுறைப் பகுதியில் என்றுமில்லாதவாறு திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஜூலை15

ஊர்காவற்றுறைப் பகுதியில் என்றுமில்லாதளவில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆள்கள் அற்ற வீடுகளில் ஓடுகள், கதவுகள், யன்னல்கள், நிலைகள் என்பன பெயர்த்தெடுக்கப்பட்டு களவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்தச் சட்டவிரோத செயல்களில் பல்வேறு திருட்டுக்குழுக்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இவர்களிடம் மேற்படி பொருள்கள் தேவைப்படுபவர்கள் பெற்று வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களுக்கு இவ்வாறு திருட்டுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

அங்கு புதிய வீடுகளை அமைப்பவர்கள் அங்குள்ள திருட்டுக் குழுக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அவர்களிடம் இருந்து குறைவான விலைகளில் பொருள்களை பெற்றுக் கொள்கின்றனர். என்றும் கூறப்படுகிறது.

இவை படகுகளில் களவாக அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களுக்கு எடுத்து செல்லப்படுகின்றன.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

இவ்வாறு அனுமதிப்பத்திரங்கள், ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகிறது. ஐந்தாம்புலம், கரம்பன் ஆகிய பகுதிகளிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் அதிகம் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. (203-127)

## பாற்பொருள்களின் அறிமுக நிகழ்வுகள் இன்று தொடக்கம் மூன்று இடங்களில்

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்கோ பாற்பொருள் தயாரிப்புகளின் மீள் அறிமுக நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை மூன்று இடங்களில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் 'லான்ட ஓ லேக்ஸ்' பாற்பொருள் அபிவிருத்தி லங்கா நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை மின்சார நிலைய வீதி, யாழ்.நகரம், யாழ்.செயலகம் முன்பாக, பாஷையூர் புனித அந்தோனியார் கோயில் ஆகிய இடங்களிலும் -

எதிர்வரும் 17ஆம் திகதி மானிப்பாய், சங்கானை, சுன்னாகம் ஆகிய நகரங்களிலும்-

எதிர்வரும் 19ஆம் திகதி குருநகர், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில், நல்லூர் கோயில் முன்பாக ஆகிய இடங்களிலும் இந்த அறிமுக நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வு முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறும். (1-202)

## செம்மணி தீர்த்தக் கேணி திறப்பு விழா

நல்லூர்,ஜூலை15

செம்மணி இந்து மயானத்தில் பிதிர்க்கடன் செய்வதற்கான தீர்த்தக்கேணி அமைக்கும் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துவிட்டன. அந்தியேட்டிக் கிரியைகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இந்தக் கேணியின் திறப்புவிழா நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எஸ்.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் தீர்த்தக்கேணியைத் திறந்துவைப்பார்.

இத்தீர்த்தக் கேணி கட்டடத்திற்குரிய நிதியை நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஜெயபதி என்பவர் அமரர்களாகிய தமது பெற்றோர்கள் இராமலிங்கம் சின்னத்துரை, சின்னத்துரை காமாட்சியம்மா ஆகியோரின் நினைவாக அன்பளிப்புச் செய்துள்ளார். இவ்விழாவில் அவர் சார்பாக அவரது சகோதரி திருமதி சந்திரலீலா நாகராஜா (இளைப்பாறிய ஆசிரியை) கலந்து கொண்டு அவர்களின் நினைவுச்சின்னத்தினை திரைநீக்கம் செய்யவுள்ளார். (203-111)

## வாசகர் திருமுகம்

### ஆங்கிலம் கற்பிக்க தகுதியானவர்களே தேவை

பிராந்திய ஆங்கில வள நிலையம் மூலம் ஆங்கில கற்கை நெறிகள் முன்னெடுக்கப்படும் என்ற பத்திரிகைச் செய்தியின் பின்னர் ஆங்கிலம் வளம் பெறவேண்டும் என்ற எண்ணம் கொண்ட பலரின் எண்ணங்களில் பல்வேறு சந்தேகக் குறிகள் தோன்றியுள்ளன. இந்த ஆங்கில கற்கைநெறியில் சம்பந்தப்படும் வளவாளர்கள் யார்? அவர்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டார்கள்? அவர்கள் தராதரம் என்ன? அவர்களை விடத் திறமையும், தகுதியும், அனுபவ முதிர்ச்சியும், பயிற்சியும் கொண்டவர்கள் எங்கள் பகுதியில் இல்லையா? போன்ற பல்வேறு வினாக்கள் அவர்கள் மனதில் தோன்றியுள்ளன. கடந்த காலங்களைப் போல் விளம்பரம் ஏதும் செய்யாமல் தமக்குத் தெரிந்தவர்களையே வளவாளர்களாக நியமிக்கும் அதிகாரிகளின் போக்குத் தரமற்ற கல்விக்கே வழிகோலும். எனவே தரமான கல்வியை பயிலுநர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை [illegible] பத்திரிகையில் விளம்பரம் செய்து தகுதியானவர்களைப் பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்.

கோ.சுப்பிரமணியம்.
கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பிள்ளைகளின் கல்விப்பசி தீர்க்கும் உன்னதமான பணியில் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

காரைநகர் மக்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே சமயத்தைப் பாதுகாத்து எவ்வாறு ஆலயங்களை உருவாக்கி சமய வளர்ச்சியில் அக்கறை கொண்டார்களோ அதே போல் கல்வி வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அந்த வகையில் கிராமங்கள் தோறும் கல்விக் கூடங்கள் அமைத்து மாணவர்கள் கல்வி கற்பதற்கு வழியமைத்தனர். இவ்வாறு அமைக்கப்பட்ட 14 பாடசாலைகளில் காரைநகர் கிழக்கு களபூமி பகுதியின் கல்வியின் கலங்கரை விளக்கமாகத் திகழ்வது காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயமாகும்.

பாடசாலையின் முகப்புத் தோற்றம்



இப் பாடசாலையின் ஆரம்ப வரலாற்றினை நோக்கும்போது 1927 ஆம் ஆண்டிற்கு முன்னர் விளானை களபூமியில் திண்ணைப் பாடசாலையாக இயங்கியது.

இந்த நிலையை அவதானித்த கந்தர் சுப்பிரமணியம் (வள்ளிசுப்பர்) என்பவரின் முயற்சியால் 1928 ஆம் ஆண்டு களபூமி நந்தாவில் குறிச்சியில் இன்று உள்ள சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ஆறுமுகம் சங்கரப்பிள்ளையின் பக்கபலமும் முயற்சியும் கூட இருந்தது.

இப்பாடசாலையின் முதல்அதிபராக முருகேசு கார்த்திகேசு என்பவர் கடமையாற்றினார். இவர் பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டார். இப் பாடசாலையில் கல்வி வளர்ச்சியடைந்தது போல கட்டட வசதிகளும் மெல்ல மெல்ல ஏற்படுத்தப்பட்டன. இப் பாடசாலையின் அதிபராக எஸ்.ஆர்.எஸ். தேவதாசன் கடமையில் இருந்த காலத்தில் திருமதி நடராசா இராசமலரினால் தனது கணவர் ஞாபகார்த்தமாக ஒரு திறந்த வெளி அரங்கம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா அனைத்திற்கும் இம் மண்டபம் பெரிதும் உதவியாக இருக்கின்றது.

## மைதானம் இல்லை; குடிதண்ணீர் பற்றாக்குறையால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 1991 இல் இப் பிரதேசத்தை விட்டு மக்கள் இடம் பெயர்ந்தபோது சுழிபுரத்தில் ஒரு தொழிற்சாலைக் கட்டடத்தில் இப் பாடசாலை இயங்கியது. அன்றைய அதிபர் எஸ்.கே. சதாசிவம் தலைமையில் தரம் 11 வரையான வகுப்புக்கள் கொண்டு இயங்கின. மீளவும் 1996 இல் காரைநகரில் மக்கள் மீள்குடியமரும் நிலை ஏற்பட்டது.



148 புள்ளிகள்
அருநுராசா இளங்குமரன்
நிலிபந்தனை காரைநகர்



148 புள்ளிகள்
நித்தியானந்தன் விநோதா
திக்கரை காரைநகர்

மீளக்குடியமர்ந்தபோது பாடசாலைக் கட்டடங்கள் ஏனைய வளங்கள் என்பன சிதைவடைந்து காணப்பட்டன.

பின்னர் காலப் போக்கில் அவையாவும் திருத்தப்பட்டு புதுப்பொலிவு பெறத் தொடங்கின. 2000 ஆம் ஆண்டளவில் இப் பாடசாலை அதிபராக பொறுப்பேற்ற ஆ.பாலகிருஷ்ணன் பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். அத்துடன் 'நிக்கொட்' நிறுவனம் 81 இலட்சம் ரூபா செலவில் 130'×125' பரப்பளவு கொண்ட நவீன வசதிகளைக் கொண்ட மாடிக்கட்டடத்தை அமைத்து 2005 ஆம் ஆண்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தது. இதனால் மகிழ்ச்சியான சூழலில்மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.



பாடசாலை அதிபர்
சு.கணேசமூர்த்தி

தற்போது இப்பாடசாலையின் அதிபராக காரைநகரைச் சேர்ந்த சு. கணேசமூர்த்தியும், உப அதிபராக் திருமதி சத்தியபாமா இரங்கநாதனும் கடமையாற்றுவதுடன் 14 நிரந்தர ஆசிரியர்களும் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். தரம் ஒன்று தொடக்கம் 11 வரையான வகுப்புகளைக் கொண்ட இப் பாடசாலையில் 240 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

ஏனைய பாடசாலைகளோடு ஒப்பிடும்போது கல்வியின் முன்னேற்றம் கண்டு வரும் இப் பாடசாலையின் தற்போதைய நிலை தொடர்பாக அதிபர் சு.கணேசமூர்த்தியுடன் கலந்துரையாடியபோது பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்.

★ டர்ணிகன் ★

இங்கு வறுமைப் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளே அதிகம் கல்வி பயில்கின்றனர். இதனால் அவர்கள் போசாக்குக் குறைபாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

(10 பக்கம் பார்க்க...)




# ஆய்வுக்குரிய தகவல்களைத் திரட்ட ஓர் இலக்கு வேண்டும்; கிடைக்கும் தரவுகளைக் கொண்டு தற்காலிகத் தீர்வை அமைக்கவும்

தமிழரின் கல்விப் பாரம்பரியத்தில் ஆய்வும் அதற்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணலும்

பாகம் 3

மேலும் பொருத்தமான ஆய்வு முறைகளைத் தெரிவதற்கு இயன்ற அளவுக்கு மூல நூல்கள் அல்லது ஆவணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். இரண்டாம், மூன்றாம்தர நூல்களை அல்லது ஆவணங்களைப் பயன்படுத்தும் போது அதில் அவற்றின் ஆய்வாளர்களின் திறனாய்வுகளுக்கு ஏற்ப மூல நூல்களில் கூறப்பட்ட முடிவுகள், கருத்துக்கள் மாற்றமடைந்திருக்கலாம். சில சமயங்களில் திரிபு படுத்தப்பட்டும் இருககலாம். ஆகவே மூலநூல்கள், ஆவணங்கள் எவை என்பதை ஆய்வாளர் உறுதிப்படுத்திக் கொண்டால்தான் முன்னெடுத்துச் செல்லும் முடிவுகளும் சரியாக அமையும். மூல நூல்களை ஆவணங்களைப் பயன்படுத்தும்போது அதில் இடம் பெற்றுள்ள தகவல்கள் அல்லது தரவுகள் பொருள் மாற்றம் பெறாமல் ஆய்வில் குறிப்பிடப்படுவதுடன், தகவல் பெறப்பட்ட நூலின் அல்லது ஆவணத்தின் தலைப்பு, அவை பெறப்பட்ட பக்கங்கள், ஆசிரியரின் பெயர், நூல் அல்லது ஆவணம் வெளிவந்த ஆண்டு, பதிப்பித்த நிறுவனத்தின் பெயர் என்பன ஒழுங்கு முறையில் குறிப்பெடுப்பதும் ஆய்வாளனொருவனுக்கு இருக்க வேண்டிய முக்கிய அம்சமாகும்.

ஆய்வின் கருப்பொருள் அல்லது ஆய்வுக்கான பிரச்சினை பல உப பகுதிகளாக அதாவது உப ஆய்வுத் தலைப்புக்களில் ஆய்வுக்கு ஏற்ற வகையில் பிரக்கப்பட்டு ஆராயப்படுவது ஆய்வை இலகுவாக்கும். அதில் ஆய்வுப் பிரச்சினையின் தன்மைக்கு ஏற்ப ஆய்வாளரின் அணுகுமுறை, நோக்கம், பார்வை மாறுபட்டதாக இருக்கலாம். சில ஆய்வில் ஆய்வுக்குரிய பிரச்சினை பல பிரிவுகளாக்கி அவற்றை தனித்தனியாக ஆய்வில் கையாண்டு பின்னர் அவற்றை இணைத்து முழுமையான ஆய்வை மேற்கொள்ளல் இலகுவானதாக அமையும். உதாரணமாக சூரியக் கதிர்வீசலின் செறிவின் நேரத்துடனான மாற்றத்தைப் பற்றிய ஆய்வில் கதிர்வீசலின் செறிவின் நேரத்துடனான மாற்றத்தைப் பதிவது பிரதான விடயமாகும்.

இதற்கான ஆய்வுச் செயற்பாட்டை கதிர்வீசலின் செறிவை பதிவதற்கு பொருத்தமான தொழில்நுட்பமுறை இனங்காணல், சூரியக் கதிர்வீசலை குறைந்த வழுவுடன் அதாவது இயன்றளவு திருத்தமாக பெறுவதற்கான பொருத்தமான கருவியை உருவாக்கல், கதிர்வீசல் செறிவின் நேரத்துடனான மாற்றத்தைப் பதிவு செய்ய தகுந்த பதிவுமுறைத் தெரிதல் போன்ற தனித்தனி ஆய்வுச் செயற்பாடுகளாக மேற்கொண்டு பின்னர் இவைகள் இணைந்த தொகுதியாக்கி முழுமையான ஆய்வை மேற்கொள்ளும் போது ஆய்வுச் செயற்பாடு இலகுவானதாக அமையும்.

மேலும் சில ஆய்வுகளில் ஆய்வுக்குரிய விடயத்தில் பல காரணிகளின் தாக்கம் இருக்கும். ஆய்வுக்குரிய பிரச்சினை இக்காரணிகளின் ஒட்டுமொத்தத் தக்கத்தைப் பற்றியதாகுமெனில் ஒவ்வோர் காரணியினது தாக்கம் பற்றிய ஆய்வையும் தனித்தனியாக கையாண்டு பின்னர் அவற்றின் கூட்டுதாக்கத்தைப் பற்றிய முடிவுகளை இறுதியாக முன்வைப்பது இலகுவானதாக அமையும்.

குறிப்பாக இக்காரணிகள் சுயாதீனமானவையெனில் ஆய்வில் இம்முறையில் முடிவெடுப்பது மிகவும் இலகுவானதாக அமையும். உதாரணமாக ஒரு மாணவனின் கல்வி முன்னேற்றம் அல்லது பின்னடைவுக்குரிய காரணங்கள் பற்றி ஆராயமுற்படும் போது குடும்ப சூழ்நிலை, பெற்றோரின் பங்களிப்பு, சமூகப் பின்னணி, பிரதேசம், பாடசாலை எனத் தனித்தனியாக ஆராய்ந்து பிரச்சினைக்குரிய காரணங்களைக் கண்டறிவதைக் குறிப்பிடலாம்.

ஆய்வை மேற்கொள்வதற்கு ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட தலைப்போடு ஒட்டிய தகவல்கள், தரவுகள் அவற்றிற்குரிய விளக்கங்கள் அவசியமாகும். ஆய்வில் சான்றுகள் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட தர்க்கரீதியான சில அனுமானங்களும் ஆய்வுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏனெனில் குறிப்பிட்ட அனுமானங்களின் அடிப்படையில் பிரச்சினைக்குரிய காரணம் எது என்பதும், அது என்ன சூழ்நிலையில் நிகழ்ந்திருக்கலாம் என்பதையும் அனுமான அடிப்படையில் தீர்மானிக்க முடியும். ஆய்வுத் தலைப்பின் தன்மைகரு ஏறப அது பொருத்தமான முறையில் பல்வேறு உபதலைப்புக்களில் பிரித்து ஆராய்வது ஆய்வுக்குரிய பிரச்சினைகளை அடையாளம் காணபதறகு உதவியாக இருக்கும்.

இது வேறுபட்ட சிறிய பிரச்சினைகளை மிகக் கவனமாகத் திட்டமிட்டு ஆய்வைத் தொடர உதவுகின்றது. ஆய்வாளர் வேறுபட்ட பிரச்சனைகளை உபதலைப்புக்களின் கீழ் ஆராய்வதற்கு நேரத்தை ஒதுக்காவிட்டால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இறுதியில் கடினமாக இருக்கும்.

எனவே ஆய்வாளன் ஆய்வுப் பிரச்சினையை பன்முகப்படுத்திப் பார்க்கக்கூடிய ஆற்றல் உடையவனாக இருப்பதும் மிகவும் இன்றியமையாத அம்சமாகும்.

பொதுவாக ஆய்வுப் புலத்திற்குள் நாம் பிரவேசிக்கும் போது விடைகாணப்படாத கேள்விகளும், தீர்க்கப்படாத பிரச்சினைகளும், சான்றுகள் இல்லாத செய்திகள், நம்பிக்கைகள் என்பனவும் எம்மைச் சுற்றிக் காணப்படுகின்றன.

இதனால் ஆய்வை மேற்கொள்ளும் ஆய்வாளர் ஒருவர் ஆய்வை முன்னெடுத்துச் செல்வதற்கு முன்கூட்டியே குறிப்பிட்ட பிரச்சினை ஏன்? எவ்வாறு? எப்போது நிகழ்ந்தது, என்ன நிகழ்ந்தது? போன்ற கேள்விகளை தமக் குள் எழுப்புவது அவசியமாகிறது.

### ஆய்வில் கருதுகோள்களும் எடுகோள்களும்

எந்த ஒரு ஆராய்ச்சியிலும் எடுகோள்களும் கருதுகோள்களும் (Hypothesis) மையமாக அமைகின்றன.

இது ஆய்வுலகிற்கு மட்டும் புதிய விடயமல்ல. ஏனெனில் நமது நாளாந்த வாழ்க்கையில் ஒன்றைச் செய்ய முற்படும் போது ஏதோ ஒரு எடுகோள் அல்லது கருதுகோளின் அடிப்படையில்தான் செய்ய முற்படு கிறோம்.

குறித்த ஒரு கருகோளுடன் செய்யப்படும் செயல் தோல்வியில் முடிந்தால் அதை அடைய இன்னொரு கருதுகோளை முன்வைக்கிறோம். அதேபோல் ஆய்வுலகில் ஆய்வாளரை வழி நடத்த ஓர் ஆய்வுப்பயண இலக்கு வேண்டும். ஆய்வுக்குரிய தரவுகளைத் திரட்டுவதற்கும் ஒரு இலக்கு வேண்டும். அது கருதுகோள் மையம் எனப்படும். கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் ஒரு தற்காலிகத் தீர்வை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அந்த தற்காலிகத் தீர்வே கருது கோள் எனப்படும்.

தற்கரீதியான ஊகம், அனுமானம், அறிவு சார் விளக்கம் என்பவற்றின் அடிப்படையில் முன்வைக்கப்படும் எடுகோள் அல்லது கருதுகோள் ஆய்வு தொடர்பான தகவல்களைச் சரியாக வழிநடாத்தவும், அவற்றில் இருந்து ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணவும் வழி வகுக்கலாம்.

இதற்கு உதாரணமாக மாலை நேரம் வீட்டுக்கு வருமொருவர் தனது படிப்பு அறையின் மேசையில் இருந்த மின் விளக்கை ஒளிரச்செய்ய அதன் ஆளியை அமர்த்துகிறார். அப்போது மின்விளக்கு ஒளிரவில்லை. அந்த நேரத்தில் மின்விளக்கு ஒளிராததற்கு அவரது மனதில் பல ஊகங்கள், அனுமானங்கள், எடுகோள்கள் தோன்றுகின்றன. மின்விளக்கு ஒளிராததற்கு பின்வருவனவற்றில் ஒன்று காரணமாக இருக்கலாம் எனக் அவர் கருதுகிறார்:

மின்விளக்கு பழுதடைந்து இருக்கலாம். மின்விளக்கு சுவரிலுள்ள மின்னிணைப்புடன் தொடர்பற்றிருக்கலாம். மின்விளக்குக்கும் சுவரிலுள்ள மின்னிணைப்புக்கும் இடையிலுள்ள தொடுப்பு பழுதாகி இருக்கலாம். மாலையில் ஏற்பட்ட கடும் காற்றினால் மின்சார சேவையில் தடங்கல் ஏற்பட்டிருக்கலாம். உரிய காலத்தில் மின் கட்டணம் செலுத்தபடாததால் மின் சேவை நிறுத்தப்பட்டிருக்கலாம்.



பேராசிரியர் க. கந்தசாமி
பேராசிரியர் பௌதீகத் துறை மற்றும் பீடாதிபதி உயர் பட்டப் பின்படிப்பு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மேலுள்ள ஒவ்வொரு கருதுகோளும் மின்விளக்கு ஒளிராமைக்குரிய காரணத்தைக் கண்டறிவதற்குரிய தகவல்களைத் தரலாம். இதற்குப் பின்வரும் வழிமுறையில் தீர்வு காண முற்படலாம்:

★ புதிய மின்விளக்கைப் பொருத்துவது. புதிய மின்விளக்கு ஒளிரின் முதலாவது கருதுகோளை ஏற்கலாம் அதுவும் ஒளிராவிடில் முதலாவது கருதுகோளை நிராகரிக்கலாம்.

★ சுவரிலுள்ள மின்னிணைப்பு இணைக்கப்பட்டுள்ளதா என்பதைக் கவனித்துப் பார்த்தல். இணைத்திருப்பின் இரண்டாவது கருதுகோளை நிராகரிக்கலாம் இணைத்திருக்கவிடில் இரண்டாவது கருதுகோளை ஏற்கலாம்.

★ மின் விளக்குடன் பொருத்தப்பட்டிருக்கும் தொடுப்பைப் பரிசோதித்துப் பார்த்தல். தொடுப்பு பழுதடை நது இருப்பின் மூன்றாவது கருதுகோளை ஏற்கலாம் பழுதடையாது இருப்பின் மூன்றாவது கருதுகோளை நிராகரிக்கலாம்.

★ அருகில் உள்ள வீட்டு மின் விளக்குகள் ஒளிருகிறதாவென அவதானித்தல். அவை ஒளிராதிருந்தால் நான்காவது கருதுகோளை ஏற்கலாம், ஒளிரின் நான்காவது கருதுகோளை நிராகரிக்கலாம்.

★ மேற்கூறப்பட்ட பரிசோதனைகளில் இருந்து இறுதியான கருதுகோளை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் 'கோப்சிற்றி' திறப்புவிழா நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. கோப்சிற்றியை யாழ்.மாவட்ட கூ.உ.ஆணையாளர் பொ.சிவலிங்கம் நாடா வெட்டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் சங்கத்தின் பொது முகாமையாளர் க.இராசதுரை சங்கானை மக்கள் வங்கி முகாமையாளருக்கு பொருள்களை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். சங்கத் தலைவர் ம.சிவசுப்பிரமணியம் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.
*(படங்கள்: சங்கானைச் செய்தியாளர்)*


உ
துர்க்கா சரணம்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



அன்புடையீர்,
கடந்த 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை விசாக நட்சத்திரத்தில் சிவப்பேறு அடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அம்மையாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (15.07.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அம்மையாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"தாமரை"
துர்க்காபுரம், மல்லாகம். **குடும்ப உறவுகள்.**
[76294]


## செயலமர்வு

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள கல்வி வலயத்தில் உள்ள ஆரம்பக் கல்விப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஷேட கல்விச் செயலமர்வு நாளை மறுதினம் வியாழக் கிழமையும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் செயலமர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-302)

# ஓதுவார்களை நியமித்து பஞ்ச புராணம் ஓதுவித்தல் வேண்டும்

தென்னிந்தியாவில் உள்ள சைவக் கோயில்களில் பூசகருக்கு அடுத்தபடியாக திருமுறைகளை முறையாக ஓதுவதற்காக பண்ணிசையை முறையாகக் கற்ற ஒருவர் நியமிக்கப்பட்டு திருமுறைகள் ஓதப்படுகின்றன. இது அக்கோயில்களின் நாளாந்த நடைமுறையாகும்.

இந்த நடைமுறை இருக்கின்ற சைவக் கோயில்களில் மிக அரிதாகவே நடைமுறையில் உள்ளது. வசதி படைத்த கோயில்கள் கூட நாளாந்தம் உற் சவம் நடக்கின்ற கோயில்கள் அடங்கலாக தமிழ் வேதமெனப் போற்றப்படுகின்ற பஞ்சபுராணம் முறையாக பண் பயின்ற ஓதுவார் ஒருவரைக் கொண்டு ஓதவேண்டும் என்ற நினைப்பு அறவே அற்றவர்களாக உள்ளனர்.

யாழ்.குடாநாட்டு கோயில்களில் உயர் திருவிழாவிற்காக படித்தரம் என்று குருக்கள் மேளம் என பலதரப்பட்ட வேலையாள்கள் நியமிக்கப்பட்டு பணம் ஒதுக்கப்பட்டு மொத்தமாக படித்தரம் என்று நாளாந்த உபயக்காரர்களிடம் கோயில் படித்தரக் கட்டுப்பணம் என அறவிடப்படுகின்றது. அப்படிப் பணம் ஒதுக்கியாவது உயர் திருவிழாத் தினங்களிலேனும் முறையாக பண்பயின்ற ஓதுவார் ஒருவரை நியமித்து பண்ணோடு பஞ்சபுராணத்தை ஓதுவித்தால் என்ன? தொண்டின் அடிப்படையில் பண் பயின்ற ஒருவரையாவது நியமித்து பஞ்சபுரா ணத்தை ஓத வைப்பது நலம்தரும்.

உயர் திருவிழாக் காலங்களில் வசந்த மண்டபப் பூசை முக்கியத்துவம் பெறுகின்றது. தீபாராதனை, அர்ச்சனை, வேத பாராயணம், பஞ்சபுராணம் ஓதல், ஆசீர்வாதம் இதன் பின் தான் கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய "வான்முகில் வளாது" என்ற வாழ்த்து பாடப்பட வேண்டும். வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆகினான்காண் என்ற தேவாரத்தின் உட்பொருள் வசந்தமண்டபப் பூசையின் வெளிப்பாடாகும்.

மக்கள் மன்றம்

மேற்சொன்ன பூசை நடைமுறை யாழ்.குடாநாட்டில் சில கோயில்களில் தான் நடைமுறையில் உள்ளது. குறிப்பாக யாழ் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயம் மற்றும் வண்ணை சிவன் ஆலயம் ஆகிய்வற்றைப் பின்பற்றி அனைத்து கோயில்களிற்கும் முன் உதாரணமாகத் திகழ்கின்றது. தேர்வடம் எடுப்பதற்கு முன் திருப்பல்லாண்டு பாடல்கள் ஓதிய பின்னரே தேர்வடம் பிடித்து தேர் இழுக்கப்படும். எனவே இந்த நடைமுறைகளை அனைத்துக் கோயில்களும் பின்பற்றினால் வேதநெறி தழைத்தோங்கும் மிகு சைவத்துறை உலகெலாம் விளங்கும்.

**நயினை. நாக.கோபாலகிருஷ்ணன்.**


## ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தானம்

உடுவில் வடக்கு - சுன்னாகம்

ஆடிப் பிறப்பு உற்சவமும் ஸ்நபன அபிஷேக நிகழ்வும்

*ஆடிப் பிறப்பு உற்சவமும் ஸ்நபன அபிஷேக நிகழ்வும் சர்வதாரி வருடம் ஆடி முதலாம் நாள்*
நாளை (16.07.2008) புதன்கிழமை

**காலை 6.30 மணிக்கு நித்திய பூசையும்**
**காலை 7.30 மணிக்கு சங்கர்ப்பணம்**
**காலை 8 மணிக்கு கும்பபூசையும்**

அதனைத் தொடர்ந்து விஷேட பூஜையும் அன்னதானமும் நடைபெறும்.
அடியார்கள் அனைவரையும் கலந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்தியை பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**தேவஸ்தானதினர்.**


## போயாதின நிகழ்வு

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளைமறுதினம் வியாழக் கிழமை போயா ஆன்மீகநிகழ்வுகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு குரு பூர்ணிமா நிகழ்வுகள் இடம்பெறும். (203)


**நல்லூர் பிரதேச செயலர் பிரிவு**
**கால்நடை வளர்ப்போரின் கூட்டுறவுச் சங்கம்**
**மட்டுப்படுத்தப்பட்டது. பதிவு இல. என் ஜே/16**
**கணக்காய்வு மீதி உறுதிப்படுத்தல்**
**01.01.2007 - 31.12.2007**

எமது சங்கத்தின் மேற்படி நிதியாண்டுக்கான கணக்காய்வு நடைபெறுவதால் அந்த நிதியாண்டில் தீவனம் பெறுவதற்காக முற்பணம் செலுத்தி இன்றுவரை தீவனம் பெற்றுக்கொள்ளாதவர்கள் அதற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து 19.07.2008 இற்கு முன்னர் கடமை நேரத்தில் எமது காரியாலயத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முகாமையாளர்,
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,
நல்லூர் பிரதேச செயலர் பிரிவு.



## 25ஆவது திருமண ஆண்டு வாழ்த்து



திருமண பந்தத்தில் இணைந்து
இன்று (15.07.2008) செவ்வாய்க்கிழமை
வெள்ளிவிழாக் காணும்

**திரு.திருமதி பரமநாதர் ரதிதேவி**

தம்பதியினரை சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*சங்கிலியன் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

*வாழ்த்துவோர்:*
**பிரியா, காயத்திரி, செந்தில், மாயவன்.**

(76284)



## சேவைத்திறன் பாராட்டு



திருமதி
**கேதீஸ்வரி தர்மசோதி**
(சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
15.05.1989 - 15.04.2008)

எங்கள் கல்லூரி ஏற்றமுற வேண்டுமென
இருபதாண்டுகள் இசையுடன் உழைத்தீர்
உத்தம ஆசிரியையே உம் சேவையால்
உயர்ந்தவர்கள் எண்ணிலடங்கா
அன்னவர் ஓய்வு காலமும் ஒளிமயமாக
நின்தாள் பணிந்தோம் சீரணித் தாயே

யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி,
சண்டிலிப்பாய்.

**அதிபர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

[சி/553716]


### பாடசாலை அதிபர்களுக்கு ஒழுக்காற்று விதிமுறை பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ்.மாவட்டத்தில் உள்ள 1ஏபி, 1சி தரப் பாடசாலை அதிபர்களுக்கு ஒழுக்காற்று விதிமுறை சம்பந்தப்பட்ட முகாமைத் துவக் கருத்தரங்கும் பயிற்சிப் பட்டறையும் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகின. தொடர்ந்து ஐந்து நாள்களுக்கு இது நடை பெறவுள் ளது.

யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறும் இந்தச் 'செயற்றிட்டம்' ஐந்து கட்டங்களாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் சுற்று நிருபத்திற்கு அமைவாக வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (203-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# விபரீத நிலையை நோக்கி மனித உரிமைகள் நிலைமை

இலங்கைத் தீவு இன்று விநோதமான ஒரு நாடாகி விட்டது. சட்டங்களும், ஒழுங்கு விதிகளும் இந்தத் தேசத்தில்தான் விபரீதமாக வியாக்கியாயனம் செய்யப்படுகின்றன.

மரணங்கள் மலிந்த இந்தப் பூமியில் குற்றமிழைத்தவர்கள் குற்றவாளிகளாக நோக்கப்படுவதில்லை. அத்தகைய குற்றவாளிகளை அம்பலப்படுத்த முயல்வோரே குற்றவாளிகளாகக் காட்டப்படுகின்றார்கள்; தண்டிக்கப்படுகின்றார்கள். அவ்வாறான விசித்திரம் இந்தத் தீவில்தான் இடம் பெறுகின்றது.

நாட்டில் ஆள்கடத்தல்கள், சட்ட விரோதப் படுகொலைகள், அச்சுறுத்தல்கள், கடத்திக் கப்பம் அறவிடல், ஊடகங்களுக்கு எதிரான மோசமான அடக்குமுறை என மனித உரிமை மீறல்கள் எல்லை கடந்து அரங்கேறுகின்றன.

அந்தத் தொடர்க் குற்றங்களின் சூத்திரதாரிகள் எவரும் அகப்படுகின்றவர்களாகவோ, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுபவர்களாகவோ இல்லை.

ஆனால் இத்தகைய கொடூரங்கள் நிகழ்கின்றன என்ற அதிர்ச்சி தரும் உண்மையைப் பறைசாற்றுவிக்கின்ற - அம்பலப்படுத்துகின்ற - தரப்பினர் மட்டும் அதற்காகத் தண்டிக்கப்படுகிறார்கள். வன்முறை வழியில் பழிவாங்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு நாட்டின் கள நிலை யதார்த்தங்களை - புறநிலை உண்மைகளை - இராஜதந்திர மொழியில் வெளிப்படுத்திய குற்றத்திற்காக ஐ. நா. அங்கத்துவ அமைப்புகள் போன்ற சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் 'பயங்கரவாதிகள்' ஆகக் கொழும்பு ஆட்சி நிர்வாகத்தால் சித்திரிக்கப்படுகின்றனர்.

தத்தமது ஊடகங்கள் மூலம் உண்மைகளைப் பறைசாற்றும் ஊடகவியலாளர்கள் 'தேசத் துரோகிகள்' என முத்திரை குத்தப்படுகின்றார்கள். அத்தகையோர் கொல்லப்படுகின்றனர் அல்லது அடித்து, உதைத்து, நாட்டை விட்டு ஓடுமாறு துரத்தியடிக்கப்படுகின்றனர். அரச அராஜகங்களை - அரச பயங்கரவாதத்தை - அம்பலப்படுத்திப் பறைசாற்றும் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படுகின்றது.

இப்படி அரசின் உண்மைச் சொரூபத்தை வெளிப்படுத்தும் சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலுமான பிரதிநிதிகளின் வாய்களை அடைத்து மூடுவதற்கு அரச படைப்பல வலிமையும் அதிகாரமும் முழு அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த நிலைமை இப்போது இன்னும் மோசமாகியிருக்கின்றது.

இப்போது நாட்டில் மனித உரிமைகளுக்காக செயற்படும் மனித உரிமைகள் அமைப்புகளுக்கு எதிராகவும் ஆளும் தரப்பின் - அதிகார வர்க்கத்தின் - அரூபக் கரங்கள் நீண்டிருக்கின்றன என்று தகவல் வெளியாகியிருக்கின்றது.

அரச தரப்பினால் மோசமாக மீறப்படும் மனித உரிமைகள் தொடர்பாகக் களத்தில் தகவல்களைச் சேகரித்து வெளிச்சத்துக்கு - வெளியுலகுக்கு - கொண்டு வரும் கீழ்மட்ட மனித உரிமை அமைப்புகளுக்கு எதிராக இந்த அடக்குமுறை அராஜகம் - அட்டூழியம் - அரங்கேறத் தொடங்கியிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், உள்ளூர் மனித உரிமை நிறுவனப் பணியாளர்கள் என மனித உரிமைக் காவலர்களுக்கு எதிராக சட்டபூர்வமற்ற முறையில் - அராஜக வழியில் - அதிகாரத்தின் அரூபக் கரங்கள் இப்படி நீண்டு வருகின்றமை குறித்து அதீத கவனம் செலுத்துமாறு ஆசிய மனித உரிமைக் குழு ஐ. நா. உயரதிகாரிகளைக் கோரியிருக்கின்றது.

இலங்கையில் சிறுபான்மை இனத்தவரின் உரிமைக்கான எழுச்சிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கு, எல்லா வகையான மார்க்கங்களையும் நாடியுள்ள கொழும்பு அரசுத் தலைமை, அத்தகைய கொடூர வழிகளைத் தான் பின்பற்றுகின்றமை பற்றிய உண்மைகள் சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு ஊடக அடக்குமுறை போன்ற கொடூரங்களைப் பிரதானமாக கட்டவிழ்த்து விடுகின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் சரிவர நிலைநாட்டப்படுவதை உறுதி செய்வதாயின், அதற்கு முதலில், பொலிஸ் மற்றும் சட்டம், ஒழுங்கினைப் பேணும் துறைகள் ஆளும் தரப்பின் அராஜகங்களை முன்னெடுத்து, அந்தத்தரப்பின் கொடூரங்களை மூடிமறைக்கும் ஒரு கட்டளைப்பீடமாக இயங்கும் தற்போதைய நிலைமையை மாற்ற வேண்டும்.

பொலிஸ் உட்பட நாட்டின் முக்கிய பாதுகாப்புத் துறைகள், ஆட்சிப் பீடத்தில் இருப்போரின் தனிப்பட்ட அரசியல் இலாபநோக்கங்களை நிறைவு செய்வதற்கான 'ஏவலர் குழு' என்ற நிலையிலிருந்து விடுபட்டு, ஆட்சி அதிகார அழுத்தங்களுக்கு அசையாது - அடிபணியாது - நீதி நெறிமுறை மிக்க துறையாக மாற வேண்டும்.

அவ்வாறு சுதந்திரமானதும், சுயாதீனமானதுமான கட்டமைப்பாகப் பொலிஸ் துறையையும் மாற்றுவதற்கான முன்முயற்சியாகவே அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கத்துடன் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஆனால் ஆண்டுகள் பல கடந்தும், அந்த அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், புதிய அரசமைப்புக் கவுன்ஸிலை உருவாக்கும் செயற்பாட்டை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முன்னெடுக்காமல், காலத்தை இழுத்தடிக்கிறார். பொலிஸ் துறையையும் தமது 'எடுப்பார் கைப்பிள்ளையாக்கி' இத்தகைய அராஜக சித்து விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தி, அதற்கு இடமளித்து நிற்கின்றார் அவர்.

இந்நிலைமை தொடருமானால் இந்நாட்டின் மனித உரிமை ஆர்வலர்கள் அனைவருமே 'பயங்கரவாதிகள்' ஆகவும் 'தேசத்துரோகிகள்' ஆகவும் முத்திரை குத்தப்பட்டு, அதற்கான விபரீத விளைவையும் - தண்டனையையும்- எதிர் கொள்ள வேண்டியவர்களாக இருப்பர் என்பது நிச்சயம்.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் விரைந்து சிரத்தை காட்டி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய விவகாரமாக இலங்கை நிலைமை மாறி வருகிறது. தவறினால் இலங்கை இன்னொரு சூடானாக - சிம்பாப்வேயாக - விரைவில் மாறுவதை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாமல் போகும்.

# ஆபத்தான கட்டத்தை உலகம் நெருங்குகிறது உடனே செயற்பட்டு காப்பாற்றியாக வேண்டும்

## ஜி-8 எண்ணெய் உற்பத்தி நாடுகளை இப்படி எச்சரித்துள்ளார் உலக வங்கித் தலைவர்

வோஷிங்ரன், ஜூலை 15

உலகம் இப்போது ஓர் ஆபத்தான கட்டத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது. ஜி - 8 நாடுகளின் தலைவர்களும் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பிரதான நாடுகளும் உணவு மற்றும் எரிசக்தி விலைகளின் மிதமிஞ்சிய ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு இப்பொழுதே செயற்பட்டு ஆக வேண்டும்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் உலக வங்கித் தலைவர் றொபேர்ட் பி.சொலிக்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் ஜி-8 நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்பியுள்ளகடிதமொன்றில்சொலெக் இக்கருத்தைத் தெரிவித்துள்ளதுடன் உணவுஎரிபொருள்பிரச்சினையால்மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் நாடுகளுக்கு குறுகிய கால உதவிகளைப் புரிவதற்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும். உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவை இந்த வகையில் கணிப்பீடு செய்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

### இயற்கை அனர்த்தமல்ல

இப்பொழுது நாம் கண்டு கொண்டிருப்பது இயற்கை அனர்த்தமல்ல மௌனமாக வரும் ஆழிப்பேரலையோ பெரும் சூறாவளியோ அல்ல; இது மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள பேரழிவு. எனவே நாம் தான் இதனை எதிர் கொண்டாகவேண்டும் என்று உலக வங்கித் தலைவர் கூறியுள்ளார்.

மிக மோசமாகப் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற வகையில் இது உலகத்துக்கு ஒரு சோதனை, எனவே தான் இந்த நெருக்கடியை எதிர்கொண்டு செயற்பட முன்வரும்படி ஜி-எட்டு நாடுகளை எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் சேர்ந்து செயற்படும்படி கேட்டுக் கொள்கின்றேன். முன் எப்போதையும் விட எண்ணெய் விலைகள் கிடு கிடுவென ஏறிக்கொண்டிருக்கின்றன. உணவு விலையேற்றமும் சேர்ந்து ஏழை நாடுகளும் சேர்ந்து சமுதாய ஸ்திரமின்மையையும் அதிகரிக்கக் காரணமாகின்றன. ஏற்கனவே 30 இற்கு மேற்பட்ட நாடுகளில் உணவுக் கலகங்கள் நடைபெறுவதைக் கண்டு வருகின்றோம். எரிபொருள் விலையேற்றம் காரணமாக அமைதியின்மையும் தோன்றியுள்ளது. நகர்ப்புற மக்கள் குறிப்பாக இந்த இரட்டை தாக்கத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

ஏற்கனவே 12 நாடுகளுக்கு உலக வங்கி 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி உதவியுள்ளது. இதேவேளை 31 நாடுகள் தற்பொழுது 400 மில்லியன் டொலர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளன என்று உலக வங்கித் தலைவர் தெரிவித்துள்ளார். (ப)

# மண்டைதீவில் 1லீற். தண்ணீர் 50 சதம் இப்போதைய கடும் வரட்சி காரணம்

யாழ்ப்பாணம்,ஜூலை15

தற்போது நிலவும் வரட்சி காரணமாக தீவுப் பகுதிகளில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மண்டைதீவுப் பகுதியில் ஒரு லீற்றர் குடிதண்ணீர் 50 சதம் வீதம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளின் பெரும்பாலானவற்றில் தண்ணீர் இல்லை எனவும் ஒருசிலவற்றில் அடிமட்டத்தில் இருக்கும் தண்ணீர் உவராகக் காணப்படுவதாகவும் கூறப்பட்டது.

இதனால் கால்நடைகளும் தண்ணீர் இன்றி அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வேலணைப் பிரதேச செயலகத்தினர் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் வாரத்தில் மூன்று நாள்களுக்கு பௌசர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்து வருகின்றனர்.

போக்குவரத்துச் செலவுக்கெனவே ஒரு லீற்றர் தண்ணீர் 50 சதம் வீதம் விநியோகிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. (203-302)

## *23 குட்டிகளை ஈன்றது 'அனக்கொண்டா' பாம்பு*

கொழும்பு,ஜூலை15

தெஹிவளை, மிருகக்காட்சிச் சாலையில் 'அனக்கொண்டா' பாம்பு ஒன்று கடந்த வெள்ளியன்று 23 குட்டிகளை ஈன்றுள்ளது என்று தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

23 குட்டிகளில் மூன்று குட்டிகள் பின்னர் இறந்துவிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த பாம்பு இனம் உலகில் அரிய வகையானது. இந்த இனத்தைச் சேர்ந்த பாம்புகள் தென் அமெரிக்காவின் அமேசன் பகுதியில் வாழ்கின்றன என்று கூறப்பட்டது.

# 'சார்க்' மாநாட்டு காலப்பகுதியில் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்ல 'பாஸ்'

கொழும்பு,ஜூலை15

'சார்க்' மாநாட்டையொட்டி அதி உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்படவிருக்கும் கோட்டை மற்றும் கொள்ளுப்பிட்டிப் பகுதிக்குள் மக்கள் செல்ல விசேட 'பாஸ்' திட்டம் ஒன்று நடைமுறைக்கு கொண்டு வரப்படவிருக்கின்றது.

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை இந்த நடைமுறை அமுலில் இருக்கும்.

அந்தப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வேலை செய்பவர்கள் ஆகியோருக்கு 'பாஸ்' வழங்கும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பயணம் செய்யவிருக்கும் வாகனத்தின் இலக்கத்துடன் 'பாஸ்' பெற விண்ணப்பிக்கவேண்டும்.

குறிப்பிட்ட அளவு பாஸ் மட்டுமே வழங்கப்படும்என்றுபிரதிப்பொலிஸ்மா அதிபர் மெடிக்வெல தெரிவித்தார்.

# இலங்கைக்கு இந்தியா வழங்கும் ஆயுத உதவியைக் கண்டிக்கும் வகையில் சென்னையில் தீப்பந்தப் பேரணி

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

இலங்கைக்கு இந்திய அரசு வழங்கி வரும் இராணுவ உதவி மற்றும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்படுதல் ஆகியவற்றைக் கண்டித்து தீப்பந்தப் பேரணி ஒன்று சென்னையில் நடத்தப் படவுள்ளது.

இந்தப் பேரணி நடத்துவதற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும் என்று பழநெடுமாறன் தெரிவித்துள்ளார்.

மேற்படிச் சம்பவங்கள் தொடர்பாக பழ.நெடுமாறன் தலைமையில் அனைத்துக் கட்சிகள், அனைத்து தமிழர் அமைப்புகளின் கலந்துரையாடல் சென்னையில் பெரம்பூர் காமராஜர் நூற்றாண்டு மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்ற பலரும் இலங்கைக்கு இந்திய அரசு அளித்து வரும் இராணுவ உதவியைக் கண் டித்தும் தமிழக மீனவர்களை சிங் களக் கடற்படை தொடர்ந்து சுட்டுக் கொள்வதைக் கண்டித்தும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன் இவற்றைக் கண்டித்து அனைவரும்ஒன்றிணைந்துதொடர்ந்து போராட்டங்களை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தின.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் இராமதாஸ் பேசும் போது ''அனைத்து கட்சி களும், அனைத்து தமிழர் அமைப் புக்களும் இணைந்து சென்னையில் பெரியதொரு பேரணி நடத்த வேண்டும் என்றும் பேரணியின் முடிவில் தீப்பந்தம் ஏந்தி உறுதிமொழி ஏற்க வேண்டும்'' என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

இறுதியாக ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கலந்துரையாடலின் முடிவுரையாக மருத்துவர் இராமதாசின் வேண்டுகோள் குறித்து கூட்டத்தினரின் ஒப்புதலைக் கேட்க, கூடியிருந்தோரின் ஒட்டுமொத்த ஆதரவோடு அதுவே கூட்டத்தின் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

## நாளை

| | |
|---|---|
| ஆடி 01 | 16.07.2008 புதன்கிழமை |
| திதி: | திரயோதசி மு.ப. 11.04 வரை |
| நட்சத்திரம் : | மூலம் பி.இ. 01.57 வரை |
| சுபநேரம் : | 04.30 - 06.00 |
| ராகுகாலம் : | 12.00 - 01.30 |

# யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை15

யாழ்.போதனா வைத்திய சாலை வளாகத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகநோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வைத்திய சாலை வளாகத்தை இவை தினமும் அசுத்தப்படுத்தி வருவதுடன் நோயாளர்கள் இல்லாத வேளைகளில் இவை அவர்களின் கட்டில்களில் ஏறிப் படுப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனால் தினமும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவற்றை என்னசெய்வது என்று தெரியாத நிலையில் மாநகர சபையினர் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாய்களை அழிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமையால் பொது இடங்களில் அவற்றின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நாய்களின் பெருக்கம் காரணமாகச் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இதனைத் தடுக்க உரிய அதிகாரிகளே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டப் படுகிறது. (203-302)

# மாவையில் இன்று வீமன்காமம் ம.வியின் மாணவர்கள் பிரார்த்தனை

வலி.வடக்கு, ஜூலை 15

வரலாற்றுப் புகழ் மிக்க மாவட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவ திருவிழா வின் 8ஆம் திருவிழாவான இன்று வீமன்காமம் மகாவித்தியாலயத்தின் உபயமாருட் மாணவர்களும் கலந்துகொண்டு கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

பாடசாலை இடம் பெயர்ந்து மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தற்போது இயங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கதாகும். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமைக்கோட்டின் கீழ்....

(07 பக்கத் தொடர்ச்சி...)

போசாக்குக் குறை பாட்டினால் மனதை ஒருமுகப்படுத்திக் கற்றலை மேற்கொள் வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனினும் மாணஉ வர்கள், ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பால் கல்வியில் முன்னேற்றம் கண்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஏழு மாண வர்கள் உயர்தரக் கல்வியைக் கற்கும் தகுதியைப் பெற்றுள்ளதுடன் செல்வி கிருசாந்தினி நரவத்தினம் - 5 ஏ, 3 பி, 2 சி, கந்தையா கிரிகரன் - 6 பி, 2 சி, 2 எஸ், சிவானந்தராசா சிவரஞ்சினி - 3 ஏ, 3 பி, 2 சி, 2 எஸ், சோம சுந்தரம் நேசகலா - 2 ஏ, 1பி, 5 சி பெறுபேறுகள் பெற்றுப் பாட சாலைக் குப் பெருமைதேடித் தந்தனர்.

அத்துடன் 2005 ஆம் 2006 ஆம் ஆண்டுகளிலும் பெருமளவு மாணவர்கள் உயர்தரக் கல்வியைக் கற்பதற்குத் தகுதி பெற்று தியாகராசா மத்திய மகா வித்தியா லயம், வட்டு. இந்துக் கல்லூரிபோன்ற கல்லூ ரிகளில் சேர்ந்து கல்வியைத் தொடர் கின்றனர்.

அதேபோன்று தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களில் பலர் சித்தியடைவதுடன் 100 இற்கும் மேற்பட்ட புள்ளி களையும் பெற்று வருகின்றனர். 2007 இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் அற்புதராசா இளங்குமரன் - 148 புள்ளிகளையும், நித்தி யானந்தன் வினோஜா -148 புள்ளிகளை பெற்று சிறப்பாகச் சித்தியடைந் துள்ளனர். 2005 ஆம் ஆண்டு 23 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 3 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் பலர் 100 இற்கும் மேற் பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 2006 ஆம் ஆண்டிலும் 100 மேற்பட்ட புள்ளிகளைப் பல மாண வர்கள் பெற்றுக் கொண்டனர்.

எமது பாடசாலையில் இருந்து மாண வர்கள் தமிழ்தின மற்றும் கணித, விஞ்ஞா னப் போட்டிகள் விளையாட்டுப் போட்டி களில் வலயக் கோட்ட மற்றும் மாவட்ட மட்டங்களில் பங்குபற்றி வெற்றியீட்டி உள்ளனர். அத்துடன் சைவபரிபாலனசபை, காரைநகர் மணிவாசகர் சபை ஆகியன நடத்தும் சமய பாடப்பரீட்சைகளில் தோற்றி சிறந்த பெறுபேறுகளையும் பெறுகின்றனர். 2007 இல் மணிவாசகர் சபை நடத்திய சமய பாடப் பரீட்சைகளில் தரம் ஐந்து மாணவி நித்தியானந்தன் வினோஜா தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

ஊர்காவற்றுறைக் கோட்டத்திற்கான உளவள நிலையமும் இப் பாடசாலையில் இயங்குகின்றது. இதற்கான ஆசிரியையாகத் திருமதி சுபானுதா தவநாயகம் செயற்படுகின்றார்.

மாணவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்கு நூலகம் அமைக் கப்பட்டு நூலக வள ஆசிரியரும் கடமையாற்றுகின்றார். எனினும் தினசரி செய்தித் தாள்கள், சஞ்சிகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உள்ளது. பாட சாலை நிகழ்வுகளில் மாணவர்களின் 'பான்ட்' வாத்தியக் குழுவினர் கலந்து சிறப்பிக்கின்றனர். இக் குழுவிற்குச் சில வாத்தியக் கருவிகள் இல்லாமை குறைபாடாக உள்ளது.

மாணவர்களின் சுய கற்றலை மேம் படுத்தும் நோக்கில் தினந்தோறும் பாடசாலை முடிந்ததும் ஒரு மணிநேரம் ஆசிரியர்களின் மேற்பார்வை யில் சுய கற்றல் செயற்பாடு இடம்பெற்றுவருகின்றது.

வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் பாடசாலை முன்றலிலே இடம்பெற்று வருகின்றன. பாடசாலை விளையாட்டு மைதானம் புனர மைக்கப்பட வேண்டும். அத்துடன் ஆரம்ப பிரிவுக்கான விளையாட்டு முற்றமும் விஸ்தரிக்கப்பட வேண்டும். மாணவர்களுக்கான குடிதண ணீர் பிரச் சினையும் பெரும் சவாலாக உள்ளது.

தகவல் தொழில் நுட்பப் பாடம் இங்கு கற்பிக்கப்படுகின்றது. அதற் கும் போதி யளவு கணனிகள் கிடைக்கப் பெற்றால் கணனிக் கல்வியை மேலும் சிறப்பாகக் கற்பிக்க முடியும். கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் இங்கு நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டிய அவசியமும் உள்ளது.

மேற் கூறப்பட்ட குறைபாடுகள் மற் றும் தேவைகளை ஈடுசெய் வதற்கும் சம்பந்தப்பட்டவர்களும், பழைய மாண வர்களும் நலன் விரும் பிகளும் முன்வரின் கிராமத்து வறிய மாணவர்களின் கல்வித் தரம் மேலும் உயர்வடைய வாய்ப்புண்டாகும். ***

## மீட்டற் செயற்றிட்டம் நேற்று ஆரம்பமானது

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.வலயக் கல்வி அலு வலகத்தால் ஜி.சீ.ஈ.உயர்தர மாணவர்களுக் கான துரித மீட்டல் செயற்றிட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து மூன்றுநாள்கள் நடைபெற வுள்ள இச் செயற்றிட்டத்தில் ஏனைய மாண வர்களையும் கலந்துகொண்டு பயன் பெறு மாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (203)

## பாலர் ஆசிரியை தேவை

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் வதிபவர் மட்டும் ஜூலை 27இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
பாலர் கல்விக் கழகம்,
*49/5, யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.* (76297)

## தவறிவிட்டது

சண்முகரத்தினம் சிந்துஜா என்பவரது தேசிய அடையாள அட்டை இல.(907782620V) 07.07.2008 - திங்கட்கிழமை இராமநாதன் கல் லூரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் தந்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.
அல்லது சண்முகரத்தினம் சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
T.P.0776450276 , 0779103468

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை
கல்வி சாரா ஊழியர்
அமரர்
பூ.காளிதாசன்
அவர்களின்
மறைவினால்
துயருற்றிருக்கும்
அவரது
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

கல்லூரிச் சமூகம்.
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்
பாடசாலை. (76299)

## வேலணை பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல்

வேலணை அலுவலகப் பிரிவிற்குட்பட்ட திருவள்ளுவர் வீதி புனரமைப்பு வேலைக்கான கேள்விகள் எமது சபையால் கோரப்படுகின்றன.

ICTAD திட்டத்தின் கீழ் M-08 உம் அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள ஒப்பந்தக்காரர்களும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூ.20,000.00 உம் மீளளிக்கப்பட முடியாத கேள்விப் பத்திரப் பணமாக ரூ. 1000.00 உம் செலுத்துவதன் மூலம் எமது சபைத் தலைமை அலுவலகத்தில் கேள்விப் பத்திரப் படிவங்களைப் பெற்றுக் கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கும்
இறுதித் திகதி : 18.07.2008 பி.ப 2.00 மணிவரை

கேள்விப் பத்திரப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும்
இறுதித் திகதி : 23.07.2008 பி.ப 12.30 மணிவரை

கேள்விப் பத்திரப் படிவங்கள் திறக்கப்படும்
இறுதித் திகதி : 23.07.2008 பி.ப் 1.00 மணிக்கு

கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ கேள்விகளைத் திறக்கும் சமயம் சமூகமளிக்கலாம். மேலதிக விவரங்களை சபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வேலணை பிரதேசசபை, வேலணை. 14.07.2008
கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்
செயலாளர். (சி/553748)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 • 02 • 1913



உதிர்வு 21 • 07 • 2002

### அமரர் அமிர்தலிங்கம் துரைசிங்கம்

திதி: திரயோதசி(15.07.2008)

முழு வாழ்க்கைக்கு நீ எழுதிய முன்னுரை - எளிமை
எழும் உயர்வுக்கு நீதந்த உபதேசம் - பணிவு
தொழும் உழைப்புக்கு நீதந்த உருவம் - உறுதி
உள மகிழ்ச்சிக்கு நீதந்த மருந்து - திருப்தி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'லிங்கநேய'
எழுதுமட்டுவாள். (76298)
தற்காலிக முகவரி:
மருதடி, பருத்தித்துறை.

# அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
# அன்னையின் இழப்பின் 31ஆம் நாள் நினைவில்



அன்னையே என்றவர் அருமை நிழலில்
ஆயிரமாயிரவர் இளைப்பாறினோம்
நன்மையே பல பெற்றனம் நாளுமே
நம்பிக்கை துணிவு நயம்பல உற்றனம்

தமிழிலே வல்லவர் தலைமையில் நல்லவர்,
தாயினும் இனியவர் தண்ணளி வடிவினர்
அமிழ்தினும் இனிய்நல் அறம்பல புகட்டியே
அரவணைத்து உயர்வுகளை அடைந்திடச் செய்தவர்

சிவத்தமிழ்ச் செல்வியாய் செம்மையருள் துர்க்கையின்
சேவடி சூடிய திறன்மிகு அரசியாய்
பவத் தொடக்கற நிதம் பாங்குறு வழி சொல்லும்
பண்டிதையானவர் பற்பலர்க்குதவினார்

உறவிலானப் பாலர்க்கு உற்ற நல்ல அன்னையாய்
உதவிகள் வேண்டுவோர்க்கு உற்றுளி உதவியாய்
நிறைபெரும் பணியினர் நெடுபெரும் புகழினார்
நெஞ்சங்கள் தோறும் நிறை நீள் விளக்காயினார்.

அம்மா எங்கள் அப்பாக்குட்டித் தங்கம்மா
அறத்துக்கும் அன்பிற்கும் அணியெனப் பிறந்தவர்
எம்மை விட்டின்று எய்தினார் வானகம்
என்றுமே அவர்புகழ் இங்கிருக்கும் நற்தீபமாய்.

நீள்விளக்காயினார்

பணிப்பாளர், பணியாளர்,
தெல்லிப்பழை பல நோக்குக் கூ.சங்கம்.
(சி/553752)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிரேம் சிமித், நீல் மக்கன்ஸி சதம் போராடுகிறது தென்னாபிரிக்கா



லோட்ஸ், ஜூலை 15

லோட்ஸ் டெஸ்ட் போட்டியில் 'பலோ-ஒன்' பெற்ற தென்னாபிரிக்க அணி இரண்டாம் இன்னிங்ஸில் உறுதியான தொடக்கத்தைப் பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற நான்காம் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணித்தலைவர் கிரேம் சிமித் 107 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார். நீல் மக்கன்ஸி 102 ஓட்டங்களுடனும், ஹசீம் அம்லா 20 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இங்கிலாந்துக்குக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இந்த அணிகள் மோதும் முதல் டெஸ்ட் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. முதல் இன்னிங்ஸைத் தொடக்கிய இங்கிலாந்து அணிக்கு அலஸ்ரியர் குக்(60), பீற்றர்ஸன்(152), பெல்(199), பிராட்(76) ஆகியோர் கைகொடுக்க, 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 593 ஓட்டங்களை எடுத்து 'டிக்ளேயர்' செய்து வலுவான நிலையில் உள்ளது.

பின்னர் முதல் இன்னிங்ஸைத் தொடக்கிய தென்னாபிரிக்கா அணி, 247 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 'பலோ-ஒனை' பெற்றது. சிறப்பாக ஆடிய அஸ்வெல் பிரின்ஸ் 102 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார். பின்னர் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் 13 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

நேற்றுமுன்தினம் நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. ஆரம்ப வீரர்களான கிரேம் சிமித்தும், நீல் மக்கன்ஸியும் சிறப்பாக ஆடி அணிக்கு நம்பிக்கை கொடுத்தார்கள். இந்த ஜோடியை உடனடியாகப் பிரிக்க இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்களால் முடியவில்லை. முதல் விக்கெட்டுக்காக 204 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அணித்தலைவர் சிமித் 107 ஓட்டங்களுடன் அன்டர்ஸனின் வேகத்தில் ஆட்டமிழந்தார். 207 பந்துகளை எதிர்கொண்டிருந்த அவர் 11 பவுண்டரிகளையும் விளாசியிருந்தார். இது அவரது 15ஆவது டெஸ்ட் சதமாகும்.

தொடர்ந்துவந்த ஹசீம் அம்லா சிறப்பாக ஒத்துழைப்பு வழங்க மறுமுனையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நீல் மக்கன்ஸி, டெஸ்ட் அரங்கில் தனது 5ஆவது சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார். நான்காம் நாள் ஆட்டம் முடிவடையும் போது தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்களை எடுத்திருந்தது. நீல் மக்கன்ஸி 102 ஓட்டங்களுடனும், ஹசீம் அம்லா 20 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்னும் ஓர் நாள் ஆட்டம் மீதமுள்ள நிலையில் தென்னாபிரிக்கா அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 104 ஓட்டங்களைப் பெறவேண்டியிருந்தது. இன்னும் 9 விக்கெட்டுகள் அந்த அணியின் கைவசமுள்ளன. நேற்று கடைசி நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

# இலங்கைத் தொடரில் சிறப்பாக ஆடுவேன்

## சென்னையில் சச்சின் பேட்டி

சென்னை, ஜூலை 15

இலங்கைக்கு எதிரான தொடரில் சிறப்பாக ஆடுவேன் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

காயம் காரணமாக பங்களாதேஷில் நடந்த முத்தரப்புத் தொடர் மற்றும் பாகிஸ்தானில் நடந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஆகியவற்றில் பங்கேற்காத சச்சின் டெண்டுல்கர், காயத்தில் இருந்து குணமடைந்து இலங்கைத் தொடரிற்கான இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார். பயிற்சிகளுக்காக சென்னை வந்த அவர், செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

நான் முழு உடல் தகுதியைப் பெற்று விட்டேன். இலங்கைத் தொடரில் எனது சிறப்பான ஆட்டத்தை அளிக்க ஆர்வமாக இருக்கிறேன். இந்திய அணி சிறப்பான நிலையில் உள்ளது. அத்தகைய நிலையைத் தொடர்ந்து வெளிப்படுத்தி இலங்கைத் தொடரில் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

இலங்கைச் சுழற்பந்து வீச்சாளர் மெண்டிஸுக்கு (ஆசியக் கிண்ணப் போட்டியில் இந்தியாவை அதிர வைத்தவர்) எதிராக நான் விளையாடியது இல்லை. எனவே அவரது பந்துவீச்சுத் தொடர்பாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க மாட்டேன். நான் அங்குதான் செல்ல இருக்கிறேன். இலங்கையில் வைத்து அவரைப் பார்த்து கொள்கிறேன். - இவ்வாறு டெண்டுல்கர் கூறினார்.

# டோனியின் முடிவு துணிச்சலானது!

## கவாஸ்கர் பாராட்டு

மும்பை, ஜூலை 15

இலங்கை டெஸ்ட் தொடரிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்ட டோனியின் முடிவு மிகவும் துணிச்சலானது என முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.


இலங்கை செல்லும் இந்திய அணியில் இருந்து ஒருநாள் போட்டிகளுக்கான அணித் தலைவர் டோனி விலகிக் கொண்டார். தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்றதால் சிறிய ஓய்வு தேவைப்படுவதாகத் தெரிவித்தார். இதனை ஏற்றுக் கொண்ட பி.சி.சி.ஐ. இவரை அணியில் சேர்க்கவில்லை. இந்தப் பிரச்சினை பெரிதானது. பண மழை பொழியும் ஐ.பி.எல். தொடரில் ஆர்வமாக இருக்கும் டோனி, டெஸ்ட் தொடரை மட்டும் புறக்கணிக்கின்றார் என விமர்சிக்கப்பட்டது. இவ்விவகாரத்தில் டோனிக்கு கவாஸ்கர் ஆதரவு தெரிவித்துள்ளார். 1970களில் ஒரு வீரர் ஓய்வு கேட்டால் அவரை துரோகியைப் போல் பார்ப்பார்கள். தற்போது நிலைமை மாறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி கவாஸ்கர் கூறியிருப்பவை வருமாறு:-

இலங்கை டெஸ்ட் தொடரிலிருந்து ஓய்வு அளிக்குமாறு கேட்ட டோனிக்கு அனுமதி அளித்த பி.சி.சி.ஐ., செயல் பாராட்டுதலுக்கு உரியது. கடந்த ஓராண்டாக ஓய்வில்லாமல் ஆடிய அவருக்கு இது புத்துணர்ச்சியை அளிக்கும். உடல் மற்றும் மனரீதியாக சோர்வடைந்திருந்த டோனியின் முடிவு மிகுந்த துணிச்சலானது. நல்ல நிலையில் உள்ள எந்த வீரரும், அணியில் உள்ள தனது நிலையான இடத்தை இப்படி அடுத்த வீரருக்கு விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் சோர்ந்துள்ள டோனி, இலங்கைத் தொடரில் இருந்து ஓய்வு கேட்டுப் பெற்றிருப்பது பாராட்டி வரவேற்க வேண்டிய முதிர்ச்சியான முடிவு. இதனைப்பார்த்து பெருமைப்பட வேண்டும். - இவ்வாறு கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

# தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் ஆப்கானில் 9 அமெரிக்க வீரர்கள் பலி




காபூல், ஜூலை 15

ஆப்கானில் தீவிரவாதிகள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலில் ஒன்பது அமெரிக்க வீரர்கள் பலியானார்கள். வட-கிழக்கு மாகாணமான குணாரில் உள்ள இராணுவ முகாமொன்று தீவிரவாதிகளின் திடீர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் அமரிக்க வீரர்கள் பலியானார்கள் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

2001 ஆம் ஆண்டு தலிபான்களுக்கு எதிரான போராட்டம் ஆப்கானில் ஆரம்பமாகியது. அது முதல் இடம்பெற்று வரும் இருதரப்பு தாக்குதல்களில், ஒரேதினத்தில் பலரைக் காவு கொண்ட தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிராந்தியம் பாகிஸ்தான் எல்லைக்கருகில் அமைந்துள்ளது. இங்கு சர்வதேசப் படைகளும், ஆப்கான் படைகளும் கூட்டாக, பல முனைகளில் தீவிரவாதப் போராளிகளுக்கான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன என இராணுவ வட்டாரப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேட்டோ சர்வதேச பாதுகாப்பு உதவிப் படைத் தலைமையகம், நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக, அறிக்கையொன்றை விடுத்துள்ளது. மலைப் பிராந்தியமான குணார் மாகாணத்தில், பெருந் தொகையான தீவிரவாதப் போராளிகள் இத் தாக்குதலை நடத்தியுள்ளார்கள் என அது குறிப்பிட்டுள்ளது.

படையினர் பதில் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். இரு சாராருக்கு மிடையிலான சண்டை சில மணித்தியாலங்கள் வரை நீடித்துள்ளது. இதில் நேட்டோ சர்வதேச பாதுகாப்பு உதவிப் படையைச் சேர்ந்த 9 அமெரிக்க வீரர்கள் பலியானார்கள். பதினைந்துக்கு மேற்பட்ட வீரர்கள் காயமடைந்தார்கள் என்றும் அது அதில் விவரித்துள்ளது.

இச் சண்டையில், நான்கு ஆப்கான் படை வீரர்களும் காயமடைந்துள்ளார்கள். ஆப்கானில் நிலை கொண்டுள்ள சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையில், தற்போது 53 ஆயிரம் வீரர்கள் உள்ளார்கள். இவர்கள் 40 நாடுகளைச் சேர்ந்தவர்களாவர் என நேட்டோ படைத்தரப்புப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

சண்டையின் போது, படைத் தரப்பால் விடுக்கப்பட்ட அழைப்பை அடுத்து, ஜெட் போர் விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் வந்து சேர்ந்தன. அவை வான்வழித் தாக்குதல்களில் ஈடுபட்டன. மலைப் பிராந்திய குன்றுகளுக்கு மத்தியில் பதுங்கியவாறே போராளிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

# பிரபஞ்ச அழகியாக வெனிசுலாவின் டயானா



வியட்நாம், ஜூலை 15

வெனிசுலா அழகி டயானா மென்டோஸா 2008 ஆம் ஆண்டிற்கான பிரபஞ்ச அழகியாகத் (மிஸ் யுனிவேர்ஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அமெரிக்க அழகி தோல்வியைத் தழுவியுள்ளார்.

வியட்நாமில் உள்ள நா டிராங் என்ற இடத்தில் பிரபஞ்ச அழகிப் போட்டிகள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் இறுதிச் சுற்று நடைபெற்றது. இதில் வெனிசுலா நாட்டு அழகி டயானா மென்டோஸா பட்டத்தை வென்றுள்ளார். கடந்த ஆண்டில் பிரபஞ்ச அழகிப் பட்டம் வென்ற ஜப்பானை சேர்ந்த ரியோ மோரி இவருக்கு மகுடம் சூட்டினார்.

22 வயதாகும் டயானா மென்டோஸா அவரது சொந்த நாட்டிலேயே கடத்திச் செல்லப்பட்டவர். அந்த அனுபவம் எந்த நிர்ப்பந்தத்தையும் சந்திக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற பாடத்தைத் தனக்கு அளித்ததாக டாயான மென்டோஸா கூறியுள்ளார்.

இந்தப் போட்டியில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த அந்நாட்டு அழகி கிறிஸ்டைல் ஸ்டூவர்டு பட்டம் வெல்வார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து பிரபஞ்ச அழகிப் பட்டம் வெல்லும் வாய்ப்பை அவர் நழுவ விட்டுள்ளார்.

# ஈரானைத் தாக்கத் தயாராகுமாறு இஸ்ரேலுக்கு புஷ் அழைப்பு

லண்டன், ஜூலை 15

ஈரானைத் தாக்கத் தயாராகும்படி இஸ்ரேலிடம் அமெரிக்க ஜனாதிபதி புஷ் கேட்டுக் கொண்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் அணு ஆயுதத் திட்டங்கள் தொடர்பாக அந்நாட்டுடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை தோல்வியடைந்தால் ஈரானின் அணுசக்தி நிலையங்களை ஏவுகணைகள் மூலம் தாக்கத் தயாராகும்படி இஸ்ரேலிடம் புஷ் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் அமெரிக்கா பின்புலமாக இருந்து செயற்படும் என்றும் புஷ் நிர்வாகம் உறுதி அளித்துள்ளது.

கடந்த வாரம் ஈரான் இராணுவம், அதிநவீன ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதனை செய்தது. இஸ்ரேலை வைத்தே இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் இரு நாடுகளுக்கிடையே போர் மேகம் சூழ்ந்துள்ளது.

# பராக் ஒபாமா செல்வாக்கில் திடீர் சரிவு; கறுப்பர் என்பதால் ஒதுக்கப்படுகிறாரா?

நியூயோர்க், ஜூலை 15

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஒபாமாவின் செல்வாக்கு திடீரெனச் சரிந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பரில் நடக்கிறது. இதில், குடியரசுக் கட்சி வேட்பாளராக மெக்கெய்னும் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக பராக் ஒபாமாவும் போட்டியிடுகிறார்கள். இருவரும் ஆதரவாளர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த இருவரில் யார் ஜனாதிபதியாக வர அதிக வாய்ப்புள்ளது என்று 'நியூஸ் வீக்' பத்திரிகை கடந்த ஒரு மாதத்தக்கு முன்பு கருத்துக் கணிப்பு நடத்தியது. மெக்கெய்னைவிட ஒபாமாவுக்கு 15 சதவீதம் அதிக ஆதரவு இருப்பதாக தெரிந்தது. இப்போது அதே பத்திரிகை மீண்டும் நடத்தியுள்ள கருத்துக் கணிப்பில் ஒபாமாவுக்கு 3 சதவீதம்தான் அதிக ஆதரவு இருப்பதாகத் தெரியவந்துள்ளது. மெக்கெய்னுக்கு 41 சதவீத ஆதரவும் ஒபாமாவுக்கு 44 சதவீத ஆதரவும் உள்ளது. ஒபாமாவின் ஆதரவில் ஏற்பட்டுள்ள சரிவு வியப்பளிப்பதாக 'நியூஸ் வீக்' கூறுகிறது.

அமெரிக்காவின் அடுத்த அதிபர் ஒபாமாதான் என்ற நம்பிக்கையில் உள்ள அவருடைய ஆதரவாளர்களுக்கு இந்தச் சரிவு அதிர்ச்சி அளித்துள்ளது. முக்கிய பிரச்சினைகளில் அரசியல் ஆதாயத்துக்காக ஒபாமா தனது நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றுகிறார் என்று ஹிலாரி கிளின்ரனின் ஆதரவாளர்கள் கருதுகிறார்கள். இதுவே சரிவுக்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

மேலும் ஒபாமா ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த கறுப்பர் என்பதால் வெள்ளையர்கள் மத்தியில் அவருடைய செல்வாக்கு குறைந்திருப்பதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# தேவாலயத்துக்கு புறப்பட்ட குரு மாணவனை கடந்த ஒரு வாரமாகக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை15

சண்டிலிப்பாயைச் சேர்ந்த குரு பயிற்சி மாணவன் ஒருவரை கடந்த 8ஆம் திகதி முதல் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், டச்சு வீதியைச் சேர்ந்த பாலசிங்கம் புஸ்பராசா(வயது 36) என்ற குருப் பயிற்சி மாணவனே காணாமற் போயுள்ளார். அவர் ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

கடந்த 8ஆம் திகதி பருத்தித்துறையில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்கு செல்வதாக வீட்டில் இருந்து புறப்பட்ட குரு மாணவன் குறித்து கடந்த ஒரு வாரமாகத் தகவல் எதுவும் இல்லை என்று அவரது மனைவியான றூத் மகேஸ்வரி தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-1-25)

# சரணடைந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை15

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்த குடும்பஸ்தர் சுகவீனம் காரணமாக யாழ்.ஆஸ்பத்தியில் நேற்றுமுன் தினம் இரவு மரணமானார்.

வேலணையைச் சேர்ந்த எஸ்.சசிதரன் (வயது 35) என்பவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த சனிக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சரண் அடைந்தார்.

யாழ்.நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்ட அவர் யாழ்.சிறைச்சாலையில் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார்.

திடீரென வயிற்றில் நோ ஏற்படுவதாக அவர் தெரிவித்ததையடுத்து சிறைச்சாலை அதிகாரிகளால் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மரணமானார்.

இச்சம்பவம் குறித்து யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன் விசாரணை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-01)

## சுடப்பட்ட அம்பனைவாசி ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

அளவெட்டி, அம்பனைப்பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் சுடப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மாலை மரணமானார்.

அம்பனை மேற்கைச் சேர்ந்த இ.ரவிச்சந்திரன் (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவார்.இவர் அம்பனைப் பகுதியில் பெரும் நிலப்பரப்பில் மரக்கறி வகைகளை பயிரிட்டு வந்த விவசாயி எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-25)

## கிழக்கு மாகாண மக்களை கருணா இன்று சந்திக்கிறார்

கொழும்பு, ஜூலை 15

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா இன்று கிழக்கு மாகாண மக்களைச் சந்திக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் இச் சந்திப்பு நடைபெறும்.

கிழக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள் பலர் கருணாவைச் சந்திக்கவுள்ளனர் என்று கூறப்பட்டது. (சி)

## சயனைட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார் என்றும் படைத் தரப்பு குறிப்பிட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முறையான திட்டம் அமுலாக்கப்படுகையில், எதிர்க்கட்சிகள் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து அரசாங்கத்தை நலிவடையச் செய்ய முயல்வது ஏன்?

சகல மக்களும் ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் வாழும் தேசத்தை உருவாக்குவதே எனது நோக்கம்.

ஐ.தே.கட்சியில், கிராமப்புறங்களில் பிறந்த அறிவுஜீவிகளுக்கு இடமில்லை. அந்தக் கட்சி பிரதேச கலாசாரப் பிணைப்புக்கள் பற்றி எதுவித புரிந்துணர்வும் இல் லாத வேட்பாளர்களை எதிர்வரும் மாகாண சபைத் தேர்லில் நிறுத்தியுள்ளது.

வெளிநாட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாக கிராமங்களின் தேவைகளைத் தீர்மானிக்கும் ஐ.தே.கட்சிக்கு மீண்டும் அதிகாரம் கிடைக்குமானால், தேசம் அழிவை எதிர்கொள்ளும் - என்றார். (அ-1)

# முத்தையன்கட்டில் ஷெல் தாக்கு; மூன்று பிள்ளைகளின் தாய் பலி!

கிளிநொச்சி, ஜூலை15

முத்தையன்கட்டுப் பகுதி மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் குடும்பப்பெண் ஒருவர் மரணமானார்.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து நெடுங்கேணியில் வசித்துவந்த சிவபாதசுந்தரம் சிவபாக்கியலட்சுமி (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் மூன்று பிள்ளைகளின் தாயாவார்.

நெடுங்கேணிப் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததையடுத்து இடம்பெயர்ந்து அவர் தற்காலிகமாக முத்தையன்கட்டில் தங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.(அ-1)

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாகப் பல்வேறு கட்டுப்பாட்டு உத்தரவுகளை ஏற்கனவே விடுத்திருந்தது என்பது தெரிந்ததே.

இந்நிலையில் இந்த மனுவை ஒட்டி இ.தொ.கா. சமர்ப்பித்த விசேட விண்ணப் பம் ஒன்றை அடுத்து இம்மனு நேற்று மீண்டும் உயர்நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது மனுத்தாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் பின்வரும் விடயங்களை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

**வங்கிக் கணக்குக் குறித்து விசாரணை**

''முகத்துவாரம் பொலிஸார் தமிழர்களைக் காரணமின்றிப் பிடித்து அவர்களின் வங்கிக் கணக்கு நிலைவரங்களைப் பற்றியெல்லாம் புகுந்து விசாரணை செய்கின்றனர். அது தவறான நடவடிக்கை. ஆள்களின் தனிப்பட்ட விவரங்களில் தலையிடும் விடயம் என்றெல்லாம் நாம் நீதிமன்றத்தின் கவனத்துக்கு ஏற்கனவே கொண்டு வந்தோம். அதனையடுத்து அத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

''இப்போது கடந்த ஜூலை 2 ஆம் திகதி விடியற்காலை 5.30 மணிக்கு முகத்துவாரம் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் எல்லோரையும் நித்திரைப் படுக்கையில் தட்டி எழுப்பி, பொது மைதானத்துக்குக் கொண்டு சென்ற முகத்துவாரம் பொலிஸார், அவர்களை ஒவ்வொருவராக- பலவந்தமாக - வீடியோ கமரா முன் நிறுத்தி, குற்றவாளிகளைப் போல படம் எடுத்து, மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியிருக்கின்றார்கள். இது அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்ட அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். தமிழர்கள் என்பதற்காக இவ்வாறு நடத்தப்படுவது மிகப்பெரும் தவறாகும்'' - என்றார் சுமந்திரன்.

அவரது வாதத்தைச் செவிமடுத்த நீதியரசர்கள், இக்குற்றச்சாட்டு உண்மையானால் இது மிக மோசமான விடயம் என்று கருத்து வெளியிட்டதுடன், இவ்விடயம் குறித்து உடனடியாக நீதிமன்றில் ஆஜ ராகி விளக்கம் தருமாறு சட்டமா அதிபரைப் பணிக்கும்படி உத்தரவிட்டு வழக்கை இன்று (செவ்வாய்க்கிழமை) மீண்டும் அழைக்கும்படியும் கட்டளையிட்டனர். (சி)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், ஐந்து கல்வி வலயக் கல்விப் பணிமனைகளின் கணக்காளர்கள் கொண்ட குழுவும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் தலைமையிலான மாகாணக்கல்வியமைச்சு அதிகாரிகள் கொண்ட குழுவும் வீடியோ கலந்துரையாடலில் பங்கு கொண்டன.

நேற்று முற்பகல் 10.15 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் இரண்டு மணிநேரம் தொடர்ந்து நடைபெற்றது.

சேவையிலிருந்து ஓய்வுபெறும் அதிபர் அல்லது ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற நாளில் இருந்து மூன்று வாரங்களுக்குள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப் பட வேண்டும் என்றும் நேற்றைய கலந்துரையாடலில் உத்தரவு வழங்கப்பட் டுள்ளது.

தமிழ்த்தின மற்றும் ஆங்கிலதினப் போட்டிகளை விரைவாகநடத்தி முடிக்க வேண்டும் என்றும் மாகாணக்கல்வி அமைச்சு செயலாளர் அறிவுறுத்தினார்.

தமது தேவைகள், பிரச்சினைகள் தொடர் பாக வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கலந்துரையாடலின் போது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர். (அ-01)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் போன்றவற்றால் தனது உதவியை இடைநிறுத்திய ஜேர்மனி, கொழும்பிற்கு உதவி வழங்கும் முன்னணி நாடுகளின் பட்டியலில் இடம் பெறவில்லை.

ஈரான் வழங்கிய சுமார் ஐயாயிரம் கோடி ரூபா உதவி கிடைத்திராத பட்சத்தில் முதல் ஐந்து மாதத்தில் இலங்கைக்குக் கிடைத்திருக்க கூடிய நிதியுதவிகள் முன்னரை விட அரைவாசியாகக் குறைந்திருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச நிதி அமைப்புகளும் மே மாதம் வரையில் இலங்கைக்கு சுமார் 11 ஆயிரத்து 300 கோடி ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளன.

2007 இல் இந்த உதவி முதல் ஐந்து மாதங்களுக்கும் சுமார் 9 ஆயிரத்து 200 கோடி ரூபாவாகவே காணப்பட்டது.

ஈரான் இவ்வருடம் உமா ஓயா திட்டத்திற்கு சுமார் ஐயாயிரம் கோடி ரூபாவை வழங்கியுள்ளது. அதேசமயம் கிழக்கின் ஒலுவில் துறைமுக திட்டம் மற்றும் கொழும்பின் குடிதண்ணீர் சுத்திகரிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கு டென்மார்க் சுமார் ஆயிரத்து 670 கோடி ரூபா வழங்கியுள்ளது.

இதேவேளை இந்தியா அந்த நாட்டிலிருந்து இறக்குமதிகளை மேற்கொள் வதற்காக சுமார் ஆயிரத்து 150 கோடி ரூபா உதவி வழங்கியுள்ளது.

இதேகாலப் பகுதியில் ஜப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி, சீனா போன்றனவும் இலங்கைக்கு நிதியுதவி வழங்கியுள்ளன.

இலங்கைக்கு வழமையாக இந்தியாவும் சீனாவும் உயர் வட்டியுடன் கூடிய கடனை வழங்கி வரும் அதே வேளை, மேற்குலக நாடுகளும், ஜப்பான் மற்றும் சர்வதேச நிதியமைப்புகளும் நீண்டகாலகடனைக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்கி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## சென்னையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவின் கொடும்பாவியைத் தீயிட்டு எரித்தனர்.கொடும்பாவியில் மூண்ட தீயை தமிழகப் பொலிஸார் அணைத்து அதனை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தினர். இத னால் உயர் நீதிமன்ற வளாகத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

உயர் நீதிமன்ற சட்டத்தரணிகளான ராமசிவசங்கர், ரஜினிகாந்த், அறிவழகன், தென்காசி எல்.சங்கரன், சங்கரசுப்பு, திவாகர் செந்தில்வேல், ஜெயக்குமார் உட்பட பல சட்டத்தரணிகள் இதில் கலந்துகொண்டனர். உயர் நீதிமன்ற வளாகப் பகுதியில் பொலிஸார் பெரும் எண்ணிக் கையில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. (சி)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளும் அமைச்சர்களும் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரி யாலயத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே விமல் மேற் கண்ட வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

முற்று முழுதாகப் பொருளாதார ஒத்துழைப்பு என்ற ஒப்பந்தம் ஒன்றை இலங்கை அரசு இந்தியாவுடன் செய்துகொள்ளத்திட்டமிட்டுள்ளது.

**இந்தியர்களுக்கு இங்கு தொழில் வாய்ப்பு**

இந்த ஒப்பந்தத்தால் எமது நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுமே தவிர நன்மை எதுவும் கிட்டாது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியர்கள் இலங்கைக்கு வந்து தொழில் வாய்ப்புக்களைப் பெறமுடியும்.

அதேபோல், இலங்கையின் பொருளா தாரம் இந்தியாவுக்கு வாரி வாரி வழங்கப்படும். இதன் மூலம் எமது நாட்டவர்களுக்கு இலங்கையில் வேலை வாய்ப்புகள் இல்லாமல் போகும். பொருளாதாரம் சீரழிந்து போகும்.

தற்போதைக்கு எமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது. இப்பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டிய தருணம் இதுதான்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்தை மேலும் சீரழிக்கும் வகையில் - இந்தியாவுக்கு அதனை அடகு வைக்கும் விதத்தில் - அரசு நடவடிக்கை எடுக்கக் கூடாது. உண்மையில் இந்த ஒப்பந்தம் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு நன்மை ஏற்படுமாக இருந்தால் இதை நாம் எதிர்க்கமாட்டோம். ஆனால், எந்தவித நன்மையும் எமக்கு இதனால் ஏற்படப் போவதில்லை என்பது தான் யதார்த்தம்.

**நாட்டுக்குப் பொருந்தாத ஒப்பந்தம்**

'சார்க்' மாநாடு நடைபெறவுள்ள இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறானதொரு ஒப்பந்தம் எந்தவகையிலும் எமது நாட்டுக்குப் பொருந்தாது.

இந்த முயற்சியை உடன் நிறுத்துமாறு நாம் ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்ட போதிலும் ஜனாதிபதி அதை நிறுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறார் எனத் தெரியவில்லை. இந்த ஒப்பந்தம் தொடர்பாகப் பேச நாடாளுமன்ற விவாதம் ஒன்றையும் நாம் கேட்டிருந்தோம். அந்த விவாதத்திற்கான வாய்ப்பு எமக்கு தாமதமாகத்தான் கிடைக்கும்.

இம்மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதத்தைக் கேட்டிருந்தோம். அன்றைய தினத்தில் அந்த விவாதத்திற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு இந்த விவாதத்திற்கான நேரத்தை ஒதுக்கித் தரும்போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி நடைமுறைக்கு வந்துவிடும். ஆகவே, இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (அ-சி)

UNIT
Jaffna | Nelliady
Now Available

UNISTA
Intel 945Gc Mother board, Intel 1.8Ghz processor, 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS

UNIPRO
Asus Intel 945Gc Mother board, Intel Dual Core 2.0Ghz 512Mb DDR2, 80Gb Hdd, Combo, 15" Crt, Keyboard, Mouse, speaker, ATX Casing with SMPS & UPS

UNIDLX
Intel Classic Main Board, Core 2 Duo 2.2Ghz, 1Gb DDR2, 160Gb Hdd, DVD-RW, 17" Crt, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS

UNISPL
Intel Classic Board, Core 2 Duo 2.6Ghz Extreme, 2Gb DDR2, 250Gb Hdd, DVD-RW, 17" LCD, Keyboard, Mouse, speaker, & ATX Casing with SMPS & UPS

Tables, Chairs & UPS

Printer & Scanners
Hp D1460, HP P1005 Laserjet
Canon Lide 25, HP G2410
HP All in One (3 In One)
HP All in One (4 In One)

Others
Keyboards, Mouse Optical
Speaker
Woofers Creative & MicroLab

Monitors
15", 17 Samsung / Viewsonic Semi / Flat CRT,
17" Samsung LCD Wide
128Mb AGPVGA
19" Samsung LCD Wide
256Mb PCI EXPRESS VGA

We Are Not Big But The Best
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, ✆4590720,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy ✆22648...

நடைமுறை விடயம்
A/L 2008
வணிகக்கல்வி பாட பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான முற்றிலும் எதிர்பார்ப்பு வினாக்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.
இடங்கள்:- UNIVERSAL, விக்னா, திரு-(கோண்டாவில்), Brain Power(குருநகர்).

இணைந்த கணிதம் பௌதிகவியல்
கொழும்பு
வல நிலை எதிர்பார்க்கை
வினாத்தாள்
இன்று மட்டும்
பூபாலசிங்கம் புத்தகசாலை

DMI
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
A/L - 2008
மாபெரும் புலமையர் கருத்தரங்கு
17.07.2008 வியாழன் - (8.30a.m)
இவ் வருடம் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.
கருத்தரங்கு கையேடுகள் வழங்கப்படும்.
ஆசிரியர் - N. Babu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.